09TH MARCH 2026

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 101 | பக்கங்கள் - 18 | editor.uthayam@gmail.com



## இம்மாதம் 24 வரை சஜினுக்கு விளக்கமறியல்

சட்டவிரோத சொத்துக்களைச் சேகரித்த குற்றச்சாட்டில் கையூட்டல் மற்றும்

02ம் பக்கம்பார்க்க...

# நிரந்தரத் தீர்வின்றி போர் நிறுத்தம் இல்லை

## ஈரான் அரசு திட்டவட்டம்

- ஈரான் நிலைகள் மீது கடும் தாக்குதல்
- உருக்குலைந்த இஸ்ரேல் நகரங்கள்
- உலகளாவிய அவசர நிலை வரலாம்

(சிறப்பு நிருபர் எம்.என்.முஹம்மத்)

ஈரான் மீதான தாக்குதல் பல கோணங்களில் தற்பொழுது பரிணமித்து வருகின்றது. ஆரம்பத்தில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தினாலும் பின்னர் அமெரிக்கா இணைந்து கொண்டதன் அடுத்து இந்தப் போர் ஒரு பிராந்திய போராக மாறிவிட்டது. மிக முக்கியமாக ஈரான் பல அமெரிக்க படையினரை கைது செய்துள்ளதாக அறிவித்துள்ளமையானது இராணுவ வட்டாரங்களில்

03ம் பக்கம்பார்க்க...

## அதிக வெப்ப நிலையால் கடுமையான பாதிப்புகள்

### சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை

அதிக வெப்பநிலை வெப்ப வெடிப்புகள், எரிச்சல் மற்றும் பூஞ்சை தொற்று போன்ற பொதுவான தோல் நோய்களை ஏற்படுத்தும் என சுகாதார நிபுணர்கள் பொது மக்களை

03ம் பக்கம்பார்க்க...

## பிலிப்பைன்ஸ் சென்றடைந்த பிரதமருக்கு வரவேற்பு

### முக்கிய நிகழ்வுகளில் பங்கேற்பு!



மார்ச் 9 ஆம் திகதி பிலிப்பைன்ஸின் மணிலாவிலுள்ள நினோய் அக்வினோ சர்வதேச விமான நிலையத்தை (NAIA) சென்றடைந்தார். இதன்போது பிலிப்பைன்ஸிற்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி சாணக்க தல்பதேவா, பிலிப்பைன்ஸ் அரசாங்க அதிகாரிகள் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோரினால் உத்தியோகபூர்வமாக வரவேற்கப்பட்டார்.

### ஈரான் கப்பலுக்கு உதவி

## அஸ்கிரிய,மல்வத்து மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு பாராட்டு



இலங்கை கடற்பரப்புக்கு அருகில் விபத்துக்குள்ளான இரண்டு ஈரான் கப்பல்களில் இருந்தவர்களுக்கு, சர்வதேச உடன்படிக்கைகளுக்கு அமைய மனிதாபிமான உதவிகளை வழங்க இலங்கை அரசு முன்வந்தமை பாராட்டுக்குரியது என அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்க தேரர் நாரம்பனாவே ஆனந்த நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

உலக வல்லரசு நாடுகள் போரில் ஈடுபட்டுள்ள

02ம் பக்கம்பார்க்க...

## எரிபொருள் பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு பல்கலைக்கழகங்களை மூடிய பங்களாதேஷ்

யுத்தம் காரணமாக எரிபொருள் பெறுவதில் ஏற்படப் போகும் பிரச்சினைகளை எதிர் கொள்வதற்காக பங்களாதேஷ் அந் நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களையும் மறு அறிவித்தல் வரை மூடியுள்ளது.

02ம் பக்கம்பார்க்க...

### இலங்கை மின்சார சபை கலைப்பு

## ஆறு அரச நிறுவனங்களிடம் சகல பணிகளும் ஒப்படைப்பு

02 >>>

## ஈரானின் அதிஉட்ச தலைவராக முஜ்தபா கொமெய்னி தெரிவு

### ஆயுதப் படைகள் புரட்சி கர படையினர் ஆதரவு தெரிவிப்பு!



ஈரானின் ஆயுதப் படைகள் புதிய உச்ச தலைவர் மொஜ்தபா காமேனிக்கு (Mojtaba Khamenei) ஆதரவை அறிவித்துள்ளன.

அரசு ஊடகங்களில் வெளியிடப்பட்ட அறிக்கையில், காமேனியை "நீதியானவர், அறிவுள்ளவர், பக்தியுள்ளவர் மற்றும் புத்திசாலி" என்று ராணுவம் விவரித்துள்ளதுடன், அவரைத்

02ம் பக்கம்பார்க்க...

## உடனடி போர் நிறுத்தத்துக்கு சீனா வேண்டுகோள்

மத்திய கிழக்கில் தீவிரமடைந்து வரும் பதற்ற நிலையை முன்னிட்டு, அந்தப் பிராந்தியத்தில் உடனடியாக போர் நிறுத்தம் அமுல்படுத்த வேண்டும் என்று சீனா வலியுறுத்தியுள்ளது.

சீனாவின் வெளியுறவு அமைச்சர் வேங் யீ, பஹ்ரைன் மற்றும் குவைத் வெளியுறவு அமைச்சர்களுடன் தனித்தனியாக தொலைபேசி மூலம் ஆலோசனை நடத்தியுள்ளார்.



## இலங்கை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இலங்கையின் மின்சாரத் துறையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாற்றமாக, இலங்கை மின்சார சபை (Ceylon Electricity Board - CEB) உத்தியோகபூர்வமாக கலைக்கப்பட்டு, அதன் பணிகள் மற்றும் பொறுப்புகள் ஆறு தனித்தனி அரசுடைமை நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றம் ஞாயிற்றுக்கிழமை (08) நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் பொறியியலாளர் தம்மிக்க விமலரத்ன தெரிவித்ததாவது, இதற்கான விசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டு, முந்தைய காலங்களில் இலங்கை மின்சார சபை மேற்கொண்ட பணிகளை மேற்கொள்ள ஆறு புதிய நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இந்த வர்த்தமானி அறிவிப்பு 09 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்ததுடன், 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கம் இலங்கை மின்சார சபையின் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட 56 ஆண்டுகள் பழமையான மின்சார சபையின் செயல்பாடுகள் இத்துடன் நிறைவுக்கு வந்துள்ளன.

புதிய அமைப்பின் கீழ் மின்சாரத் துறையானது, மின்சார உற்பத்தி, மின்சார பரிமாற்றம், மின்சார விநியோகம், மின்சார அமைப்பு செயல்பாடுகள் எனப் பிரிக்கப்பட்டு, ஆறு தனித்தனி அரச நிறுவனங்களால் நிர்வகிக்கப்படும்.

இந்த மறுசீரமைப்பின் மூலம் 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரம் சட்டத்தின் மீதமுள்ள பிரிவுகளும் அமுலுக்கு வந்துள்ளன. எனினும் சில குறிப்பிட்ட பிரிவுகள் மட்டும் தற்போது அமுல்படுத்தப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையில் பணியாற்றிய அனைத்து ஊழியர்களும், தன்னார்வ ஓய்வு திட்டத்திற்கு விண்ணப்பித்தவர்களைத் தவிர, புதிதாக நிறுவப்பட்ட ஆறு நிறுவனங்களுக்கும் மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் மார்ச் 10 முதல் வழங்கப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் தன்னார்வ ஓய்வு திட்டத்திற்கு விண்ணப்பித்த ஊழியர்கள் நேற்றைய தினம் நள்ளிரவு முதல் தங்களது பதவிகளில் இருந்து விலகியதாகக் கருதப்படுவார்கள். அவர்களுக்கான நலன்கள் பின்னர் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையுடன் இணைக்கப்பட்டிருந்த ஊடகப் பேச்சாளர் பதவியும் இனி அமுலில் இருக்காது. புதியதாக உருவாக்கப்பட்ட ஒவ்வொரு நிறுவனமும் தனித்தனி ஊடகப் பேச்சாளர்களை நியமிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நாட்டில் மின்சார உற்பத்தி அல்லது விநியோகத்தை பாதிக்காது என அதிகாரிகள் பொதுமக்களுக்கு உறுதி அளித்துள்ளனர்.

இதனுடன் லங்கா மின்சார நிறுவனம் (LECO) நிறுவனமும் புதிய அமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட விநியோக நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவுள்ளது.

இலங்கை மின்சார சபையை பல அரச நிறுவனங்களாகப் பிரிப்பது, தெளிவுத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் செயல்திறன் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் மின்சாரத் துறையின் வரலாற்றில் மிகப்பெரிய மறுசீரமைப்புகளில் ஒன்றாக இந்த நடவடிக்கை கருதப்படுகின்றது. புதிய அமைப்பு மூலம் மின்சாரத் துறையின் நிர்வாகம் மேலும் சீரமைக்கப்பட்டு, திறன் மேம்படும் என அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

## அதிக...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

எச்சரித்துள்ளனர்.

மேலும் குழந்தைகள் மென்மையான தோல் மற்றும் வெளிப்புற வெப்பத்திற்கு அடிக்கடி வெளிப்படுவதால் பாதிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

நாட்டில் நிலவும் வெப்பமான வானிலை காரணமாக குழந்தைகளிடையே தோல் பிரச்சினைகள் மற்றும் நீரிழப்பு அதிகரிக்கும் என்று சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

உடல் வெப்ப குறைப்பு

ஈரானிய போர்க் கப்பலால் இலங்கைக்கு தொடரும் சிக்கல் - வெளியேற்ற முடியாமல் தவிப்பு

ஈரானிய போர்க் கப்பலால் இலங்கைக்கு தொடரும் சிக்கல் - வெளியேற்ற முடியாமல் தவிப்பு

இது தொடர்பான அறிவிப்பில் மேலும், அதிக வெப்பம் குழந்தைகளிடையே நீரிழப்பு அபாயத்தை அதிகரிக்கிறது. இது மோசமான தூக்கம், சோர்வு மற்றும் பசியின்மை போன்ற பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். சரியான மேற்பார்வையின் கீழ் தண்ணீரில் விளையாடுவதன் மூலம் குழந்தைகளை குளிர்விக்க அனுமதிப்பது வெப்பமான காலநிலையில் உடல் வெப்பத்தைக் குறைக்க உதவும்.

இதற்கிடையில், பல பாடசாலைகள் தற்போது ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதால், வெளிப்புற விளையாட்டு நடவடிக்கைகளின் போது வெப்ப சோர்வு மற்றும் வெப்ப பக்கவாதம் ஏற்படும் அபாயம் குறித்து சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். விளையாட்டுகளின் போது அதிகப்படியான வியர்வை சோடியம் மற்றும் பொட்டாசியம் போன்ற அத்தியாவசிய உடல் உப்புகளை இழக்க வழிவகுக்கும்.

போதுமான அளவு தண்ணீர் குடித்தல்:

இது மூளை மற்றும் இதயம் உள்ளிட்ட முக்கிய உறுப்புகளை பாதிக்கலாம். பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டு அமைப்பாளர்கள், குழந்தைகள் போதுமான அளவு தண்ணீர் குடிப்பதை உறுதி செய்ய வேண்டும், வழக்கமான இடைவெளிகளை எடுக்க வேண்டும் மற்றும் அதிக வெப்பத்திற்கு நீண்ட நேரம் வெளிப்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக வெப்பமான நேரங்களில், குழந்தைகளை நேரடி சூரிய ஒளியில் இருந்து விலக்கி வைக்கவும், நீரேற்றமாக இருக்க நிறைய தண்ணீர் மற்றும் இயற்கை பானங்களை குடிக்க ஊக்குவிக்கவும் சுகாதார அதிகாரிகள் பெற்றோரை வலியுறுத்தியுள்ளனர்.

## உடனடியாக...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இந்த உரையாடல்களின் போது மத்திய கிழக்கில் வேகமாக மோசமடைந்து வரும் சூழ்நிலை குறித்து சீனா ஆழ்ந்த கவலை வெளியிட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

சீன வெளிவிவகார அமைச்சு இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

பஹ்ரைன் வெளியுறவு அமைச்சர் அப்துல்லத்தீப் பின் ராசீட் அல் ஸயானியுடன் நடைபெற்ற உரையாடலில், பிராந்தியத்தில் அமைதி மற்றும் நிலைத்தன்மையை பேணுவதற்காக சீனா ஆக்கபூர்வமான பங்காற்றத் தயாராக இருப்பதாகவும் வேங் யீ தெரிவித்துள்ளார்.

மேலும் குவைத் வெளியுறவு அமைச்சர் ஜாரா ஜாபர் அல் அஹமட் அல் சாபாவுடன் நடந்த பேச்சுவார்த்தையில், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் விரைவாக போர் நிறுத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

அத்துடன் வளைகுடா நாடுகளின் இறையாண்மை, பாதுகாப்பு மற்றும் பௌதீக ஒருமைப்பாடு முழுமையாக மதிக்கப்பட வேண்டும் என சீனா வலியுறுத்தியுள்ளது.

## ஈரானின்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தேர்ந்தெடுத்ததன் மூலம் நிபுணர்கள் அவை (Assembly of Experts) "தங்கள் புத்திசாலித்தனத்தை நிரூபித்துள்ளதாக" கூறியுள்ளது.

இதற்கு இணையாகச் செயல்படும் இஸ்லாமிய புரட்சிகர காவல்படையும் (IRGC) காமேனிக்கு வாழ்த்து தெரிவித்ததுடன், தங்களின் "நேர்மையான மற்றும் வாழ்நாள் முழுவதுமான விசுவாசத்தை" பிரகடனப்படுத்தியுள்ளது.

## எரிபொருள்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அமெரிக்க ஈரான் மோதல்களையடுத்து எரிபொருள் பெற்றுக் கொள்வதில் ஏற்படப் போகும் பாதிப்புகளைக் கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பங்களாதேஷ் அரச உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## ஈரானிய...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இக்கட்டான காலப்பகுதியில், இவ்வாறானதொரு தீர்மானத்தை எடுப்பது கடினமானது என்ற போதிலும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மிகவும் புத்திசாலித்தனமாக சரியான நேரத்தில் சரியான முடிவை எடுத்துள்ளார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழலால் இலங்கை மறைமுகமாக அதன் ஒரு பங்காளியாக வேண்டிய நிலை குறித்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

## இம்மாதம்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் கைதான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கைதானவர் இன்று கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது அவரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சட்டவிரோத சொத்துக்கள் ஈட்டியது தொடர்பான விசாரணைக்காக வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக, இன்று முற்பகல் அவர் கையூட்டல் ஆணைக்குழுவுக்கு பிரவேசித்திருந்தார்.

இதன்போது, விசாரணைகளை முன்னெடுத்த அதிகாரிகள் அவரை கைது செய்தனர்.

சுமார் 243.8 மில்லியன் ரூபாய் பெறுமதியான சொத்துக்களை சட்டவிரோதமான முறையில் ஈட்டியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



## நிரந்தர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த போரின் போது இஸ்ரேலுக்கு மிகவும் பயங்கரமான இழப்பு ஏற்பட்டு இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்ற நிலையில் இஸ்ரேலானது ஈரானின் நீர் நிலைகள் மற்றும் எண்ணெய் நிலைகளை தாக்குவதில் கவனம் எடுத்திருப்பதானது இந்தப் போர் மிகவும் ஆபத்தான கட்டத்துக்கு செல்லும் என்பதை காட்டி நிற்கிறது.

பல தரப்பு மத்தியஸ்த முயற்சிகள் நடைபெற்றாலும் ஈரான் ஒரு நிரந்தரமான தீர்வின்றி யுத்த நிறுத்தத்திற்கு உடன்பட முடியாது என்று தெளிவாக அறிவித்துள்ளது. இதன் காரணமாக இந்த யுத்தம் சில நாட்களுக்கு அல்லது சில மாதங்களுக்கு தொடர்ந்து செல்லக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதாக இராணுவ அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த யுத்தத்தை பொறுத்தமட்டில் இப்போதைய சூழ்நிலையில் ஈரான் வளைகுடா நாடுகள் மீது தாக்குதல் நடத்துவதில்லை என்று குறிப்பிட்டாலும் தொடர்ந்து வளைகுடா நாடுகளில் இருந்து ஈரானை நோக்கி தாக்குதல்கள் நடைபெறுவதால் சில நாடுகளை நோக்கி ஈரான் தாக்குதல் நடத்தி வருவதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஈரான் எத்தனை வருடங்கள் என்றாலும் போராடுவதற்கு தயாராக இருப்பதாக ஈரான் இராணுவ தளபதி தெரிவித்திருப்பதுடன் ஒரு முழு அளவிலான அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் மீதான ஒரு போராட்டத்தை ஆரம்பிக்க இருப்பதாக ஈரான் அறிவித்துள்ளது. இது எந்த வகையான போராட்டம் என்று இதுவரையில் தெரிவிக்கப்படாவிட்டாலும் இது பரந்துபட்ட ஒரு போராக அமைய வாய்ப்பு இருப்பதாக கணிக்கப்படுகிறது. இந்த சூழ்நிலையில் இன்று காலை நெதர்லாந்தின் அமெரிக்க தூ தரகத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பானது இஸ்ரேல் உடைய போலி தாக்குதலாக அமைந்திருக்கலாம் என்பதே பலரது கருத்தாகவும் உள்ளது. இஸ்ரேலை பொறுத்த மட்டில் சைப்ரஸ் துருக்கி போன்ற நாடுகளுக்கு ஈரான் தாக்குதல் நடத்துவது போன்று போல்ஸ்பிளாக் தாக்குதலை நடாத்தி யுத்தத்தின் கவனத்தை திருப்புவதற்கான ஒரு முழு முயற்சியொன்றை இஸ்ரேல் செயற்படுத்தி வருகிறது. ஆனால் ஈரான் தொடர்ந்தும் நாங்கள் சைப்ரஸ் மீதோ துருக்கி மீதோ தாக்குதல்கள் எவையும் நடத்தவில்லை என்பதை தெளிவாக அறிவித்துள்ள நிலையில் இஸ்ரேல் பல்வேறுபட்ட முயற்சிகளை செய்து வருவதால் உலகளாவிய ரீதியில் அது இவ்வாறான முயற்சிகளை செய்வதற்கு வாய்ப்பு இருப்பதாக இராணுவ அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஐ.அ.இராச்சியத்தில் இருந்து ஈரான் மீதான தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக ஆரம்பத்தில் கருதப்பட்டாலும் ஐ.அ.இராச்சியம் அதனை மறுத்துள்ளது.

ஆனால் ஈரான் ஐ.அ.இராச்சியத்தில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டிருந்தால் கட்டாயம் அதற்கு பலமான பதிலடி கொடுக்கப்படும் என்று அறிவித்திருப்பதானது தற்செயலாக ஐ.அ.இராச்சியம் இந்தப் போராட்டத்தில் இணையுமாக இருந்தால் அது நிச்சயமாக பல ஆசிய நாடுகளையும் பாதிக்கக்கூடிய அளவுக்கு உலகளாவிய ஸ்தம்பித்த நிலையை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது மத்திய கிழக்கின் அதிகமான வான் பரப்புகள் மூடப்பபட்டு இருப்பதால் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி இருப்பதோடு ஹோமூஸ் ஜலசந்தி அதேபோன்று செங்கடல் ஊடாக பயணிக்கும் போர்க்கப்பல்கள் மற்றும் எண்ணெய்த் தாங்கிக் கப்பல்களும் பலத்த சவால்களை எதிர்நோக்குகின்றன. இதனால் உலக அளவில் மசகு எண்ணெய்யின் விலை பெருமளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது மசகு எண்ணெய் மற்றும் இயற்கை வாயு என்பவற்றின் விலை ஐரோப்பிய சந்தையில் பெருமளவு அதிகரித்து வருகின்ற அதேவேளை ஆசிய நாடுகளான பாகிஸ்தானிலும் இயற்கை வாயு மற்றும் பெட்ரோலிய பொருட்களின் விலையும் பெருமளவு அதிகரித்துள்ளது. இந்த சூழ்நிலை இலங்கை போன்ற வளர்முக நாடுகளையும் பெருமளவில் பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை தென் லெபனானில் இருந்து இஸ்ரேல் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் பெருமளவுக்கு அதிகரித்து வருகின்றன.

இஸ்ரேல் இந்த தாக்குதல்களில் பலத்த இழப்புகளை எதிர்கொண்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. லெபனான் ஹிஸ்புல்லா போராளிகள் ஒரு புதுவிதமான ஆயுதத்தை பயன்படுத்துவதாகவும் இதனால் இஸ்ரேலிய தாங்கிகளும் ஜீப்புகளும் பெருமளவில் அழிவுக்கு உட்படுத்தப்பட்டு இருப்பதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹிஸ்புல்லாக்கள் தென் லெபனானின் பல கிராமங்களில் இருந்து இஸ்ரேலிய விசேட அதிரடி ராணுவத்தை கொலாணி பிரிவை விரட்டி அடித்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் போது இஸ்ரேல் மேலிருந்தும் ஈரானில் இருந்தும் நடைபெறும் பலஸ்டிக் ஏவுகணை தாக்குதலுக்கு மேலதிகமாக ஹிஸ்புல்லாக்களும் ரொக்கட் தாக்குதல்களை தொடர்ந்தும் நடத்தி வருகின்ற அதே வேளை சில வட இஸ்ரேலிய கிராமங்களில் இருந்து அவசரமாக பொதுமக்களை வெளியேறுமாறு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் போர் இன்னும் சில வாரங்களுக்கு தொடருமாக இருந்தால் உலகளாவிய அவசர நிலையை பிரகடனப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்பது பலரது கருத்தாகும்.

அவ்வாறு உலகளாவிய அவசர நிலையை பிரகடனப்படுத்தப்படுமாக இருந்தால் இன்னும் பல நாடுகள் இந்த போரில் இணைவதற்கும் இந்தப் போர் கட்டுக்கடங்காத ஒரு நிலையை அடைய வாய்ப்பு இருப்பதாக சொல்லப்படுகிறது.



www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2026 FEBRUARY 21 - SATURDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# ஈரான் மீண்டெழும்

ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும், இஸ்ரேலும் மிகப்பெரிய இராணுவ நடவடிக்கையை சனிக்கிழமை பெப்ரவரி 28 ஆம் திகதிமுதல் ஆரம்பித்துள்ளன.


முதல்நாளிலேயே ஈரானிய வழிகாட்டி ஆயத்துல்லாஹ் அலி கமெய்னி உள்ளிட்ட முக்கியஸ்தர்களை ஈரான் இழந்துள்ளது.

ஈரான் இத்தனை பெரிய இழப்புகளை ஒரேநாளில் சந்திக்கும் என யாரும் எதிர்பார்க்கவில்லை.

அதேவேளை ஈரானிய தாக்குதலும் விஸவரூபம் பெற்றுள்ளது. இஸ்ரேலுக்கும், அமெரிக்காவுக்கும் பொருட் சேதங்களும், உயிர் சேதங்களும் கணிசமாக ஏற்பட்டுள்ளது.

இதற்கு அப்பால் மத்திய கிழக்கில் உள்ள பல முஸ்லிம் நாடுகளில் உள்ள அமெரிக்க நலன்களும் குறிவைக்கப்பட்டு ஈரானினால் இந்த செய்தி எழுதப்படும்வரை தாக்கப்பட்டு வருகின்றன.

அண்மித்த நாட்களில் இந்த யுத்தம் முடிவடையும் வாய்ப்புகள் குறைவாக உள்ளன. 46 வருடங்கள் ஈரானின் வழிகாட்டியாக செயற்பட்ட கமெய்னியின் இழப்பு அந்நாட்டுக்கு இலகுவானதல்ல எனலாம். கடந்த காலங்களில் ஈரான் இழப்புகளை சந்திந்த போதும், மீண்டும் எழுந்தது. அவ்வாறே இம்முறையும் நிகழுமென எதிர்பார்ப்போம்.





# ஈரானின் புதிய உச்ச தலைவருக்கு ரஷ்ய வடகொரிய தலைவர்கள் வாழ்த்து









# சேதனப் பசளைப் பயன்பாட்டின் மூலமான முன்னோடி நெற்செய்கை வவுனியாவில் வெற்றி

## வடக்கு கிழக்குக்கு மாகாணங்களுக்கு விரிவுபடுத்தவும் திட்டம்







சேதனப் பயன்பாட்டின் மூலம் உணவு உற்பத்தி விவசாயப் பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைதல் என்ற திட்டத்தின் கீழ் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்ட தோழமை பண்ணை பரீட்சார்த்த நெற்செய்கை பெரிதும் வெற்றியளித்துள்ளதாக ஈழ மக்கள் ஐக்கிய முன்னணி செயலாளர் மாட்டின் ஜெயா தெரிவித்துள்ளார்.
வவுனியா, கள்ளிக்குளத்தில் நான்கு ஏக்கர் நிலப்பரப்பில் எழுபது சதவீதத்திற்கும் மேற்பட்ட சேதனப் பசளையைப் பயன்படுத்தி பரீட்சார்த்த மாக முன்னெடுக்கப்பட்ட இந் நெற்செய்கை மூலம் 121 மூடைகள் அறுவடை கிடைக்கப்பெற்றுள்ளது.
அதனால் தோழமை பண்ணை செய்கை திட்டத்தை முற்றிலும் சேதனப் பசளைப் பயன்பாட்டு பயிர்ச்செய்கைத் திட்டமாக வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு விரிவுபடுத்த எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இரசாயனப் பசளையையோ கிருமி நாசினிகளையோ பாவிக்காது சேதனப் பசளையைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் உணவு உற்பத்தி விவசாயப் பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைதல் என்ற தோழமை பண்ணை செய்கை திட்டத்தை வவுனியா கள்ளி குளத்தில் பரீட்சார்த்தமாக முன்னெடுத்தோம்.

இத்திட்டத்தின் கீழ் நான்கு ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கைக்கு தேவையான நெல், சேதனப் பசளை உட்பட அனைத்தையும் நாம் அன்பளிப்பாக வழங்கினோம். எமது வவுனியா மாவட்ட அமைப்பாளர் தோழர் கலை தலைமையில் பத்து நபர்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்ட இத்திட்டத்தில் ஏக்கருக்கு 30 மூடைகள் படி 121 மூடைகள் அறுடையாகக் கிடைக்கப் பெற்றுள்ளன. இது அசேதனப் பசளையைப் பயன்படுத்தாது சமூகத்தை தன்னிறைவு பொருளா தாரத்தை நோக்கி நகர்த்தும் பரீட்சார்த்த திட்டத்திற்கு கிடைத்துள்ள பாரிய வெற்றியாகும்.
அதனால் இத்திட்டத்தை வடக்கு கிழக்குக்கு விரிவுபடுத்த திட்டமிட்டு ள்ளோம். நெற்செய்கை உட்பட மரக்கறிச் செய்கை அடங்கலாக உணவு உற்பத்தி விவசாயத்துறைக்கு தோழமை பண்ணை செய்கை பரவலாக்கப்படும்.
சேதனப் பசளையைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் விவசாய உணவுப் பொருட்களுக்கு உள்நாட்டிலும் குறிப்பாக வெளிநாடுகளில் அதிக கேள்வி நிலவுகிறது. அதனால் இத்தகைய உணவு உற்பத்தி பயிர்ச்செய்கை அறுவடைகளில் உள்நாட்டு நுகர்வுக்கு மேலதிகமானவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும். அதன் ஊடாக நாட்டுக்கு அதிக அந்நிய செலாவணியை ஈட்டிக் கொடுக்க வாய்ப்பும் கிடைக்கப்பெறும். அத்தோடு இத்துறையில் தொழில் வாய்ப்புக்களும் உருவாகும் என்றும் குறிப்பிட்டார்.

# தனிநபர் ஆக்கிரமிப்பிலிருந்த அரச காணி மீட்பு

## வாகரை பிரதேச செயலாளருக்கு உறுப்பினர் கைதர் நன்றி தெரிவிப்பு!

(எச்.எம்.எம்.பர்ஸான்)

தனிநபர் ஒருவர் கையகப்படுத்தி வைத்திருந்த அரச காணியை வழக்குத்தாக்கல் செய்து அதனை மீட்டுத் தந்தமைக்கு வாகரை பிரதேச செயலாளருக்கு வாகரை பிரதேச சபை உறுப்பினர் எம்.பி.கைதர் நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.
பொதுத் தேவை ஒன்றுக்காக வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கேணிநகர் பகுதியில் காணி ஒன்று ஒதுக்கப் பட்டிருந்தது. அவ்வாறு பொதுத் தேவைக்காக அடையாளப்படுத்தப் பட்டிருந்த காணியை நபரொருவர் அத்துமீறி தன்வசப்படுத்தியிருந்தார்.
அதனை பிரதேச சபை உறுப்பினர், கிராம அபிவிருத்தி சங்கம், பள்ளிவாசல்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.
இவ்விவகாராம் தொடர்பில் பிரதேச செயலாளர் நீதி மன்றில் உண்மைத் தன்மையை



வெளிப்படுத்தி காணியை மீட்டுள்ளமைக்கு கிராம மக்கள் சார்பாக தனது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவிப்பதாக பிரதேச சபை உறுப்பினர் கைதர் நன்றி தெரிவித்ததோடு அரச செலவில் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டு காணப்படும் குறித்த காணியில் எதிர் காலத்தில் மத்திய மருந்தகம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும் பிரதேச சபை உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

# அனுதாபப் புத்தகத்தில் ஹக்கீம் கையொப்பம்

அமெரிக்க-இஸ்ரேல் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட ஈரான் இஸ்லாமியக் குடியரசின் உயர் தலைவர் ஆயத்துல்லா அலி கமேனி அவர்களின் மறைவை யிட்டு கொழும்பு -7 இல் உள்ள அந் நாட்டுத் தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் வைக்கப்பட்டுள்ள அனுதாபப் புத்தகத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களின் தலைமையில் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கள் கடந்த புதனன்று (4) கையொப்பமிட்டதோடு, அந் நாட்டு தூதுவர் கலாநிதி அலி ரசா டெல்கொஷ் உடன் அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்டனர்.





# புத்தளம் ஆனமடு வயல் காணி உரிமை பத்திரம் வழங்கும் நிகழ்வு







(சியாஜ்)

தாம் வசிக்கும் காணிகளுக்குப் பல வருடங்களாக சட்டபூர்வமான காணி உரிமை பத்திரம் இன்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு, காணி உரிமைகளை வழங்கும் விசேட வேலைத்திட்டம் ஒன்று பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபயரத்ன தலைமையில் (24) புத்தளம், ஆனைமடுவ பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.
ஆனைமடுவ, நவதத்தேகம, கருவலகஸ்வெவ, மகாகும்புக்கடவல மற்றும் வனாத்தவில்லுவ போன்ற பகுதிகளில் வாழும் மக்கள், ஒரு அங்குல நிலத்தையேனும் சட்ட பூர்வமாகத் தமதாக்கிக் கொள்ள முடியாமல் நீண்டகாலமாக பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருந்த தாகவும் குறிப்பாக இந்தப் பிரதேசங்களிலேயே பிறந்து, இங்கு வியர்வை சிந்தி உழைக்கும் சாதாரண மக்களுக்குரிய காணி உரிமையை வழங்குவது அரசாங்கத்தின் முதன்மைக் கடமையாகும் என அமைச்சர் பேராசிரியர் சந்தன அபயரத்ன தனது உரையில் வலியுறுத்தினார்.
இந்த வேலைத்திட்டம் அரசியல் கட்சிப் பேதங்களுக்கு அப்பாற்பட்டு வெளிப்படைத்தன்மையுடன் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் கடந்த காலங்களில் அரசியல் அல்லது தனிப்பட்ட நெருக்கங்களின் அடிப்படையில் காணிகள் வழங்கப் பட்ட போதிலும், தற்போதைய அரசாங்கத்தின் கீழ் எந்தவொரு அரசியல் பேதமுமின்றி தகுதியின் அடிப்படையில் மாத்திரமே காணிகள் வழங்கப்படுவதாகவும் இந்தச் செயற்பாட்டின் மூலம் அரசியல் வாதிகளோ அல்லது அதிகாரிகளோ எவ்வித தனிப்பட்ட இலாபத்தையும் எதிர்பார்க்கவில்லை என்றும், மக்களின் அடிப்படைத் தேவையை நிறைவேற்றுவதே இதன் நோக்கம் என்றும் அமைச்சர் இதன் போது தெரிவித்தார்.
மேலும் நாட்டின் ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் நடை முறைப்படுத்தப்படும் வளமான நாடு, அழகான வாழ்க்கை கொள்கைப் பிரகடனத்திற்கு இணங்க, மக்களுக்கு கௌரவமான வாழ்க்கையைப் பெற்றுக்கொடுப்பதே அரசாங்கத்தின் இலக்காகும். “காணி உரிமையும் தலைக்கொரு கூரையும் இன்றி அழகான வாழ்க்கையை அடைய முடியாது” எனக் குறிப்பிட்ட அமைச்சர், வீடற்ற மக்களுக்கு வீடுகளை வழங்குவதற்காக கடந்த ஆண்டு முதல் “ சொந்தமான ஓரிடம், அழகான வாழ்க்கை “ எனும் தேசிய வீடமைப்பு உதவித் திட்டத்தை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாகவும், வழங்கப்படும் இந்தக் காணிகளை எக்காரணம் கொண்டும் விற்பனை செய்ய வேண்டாம் என மக்களிடம் வேண்டிக் கொண்டார்.
காணி உரிமைகளை வழங்குவதற்கு மேலதிகமாக, அப்பகுதிகளில் காணப்படும் நீர், மின்சாரம் மற்றும் வீதிப் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கும் அரசாங்கம் எதிர்கால த்தில் நடவடிக்கை எடுக்கும் எனவும் இதன்போது அமைச்சர் உறுதியளித் தார்.
இந்நிகழ்வில் பிரதேச மக்கள் பிரதிநிதிகள், ஆனமடுவ பிரதேச செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் மற்றும் பெருமளவிலான பொது மக்கள் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கை முஸ்லிம்களின் வரலாறு தொடர்பில் கொழும்பில் நிறைவுற்ற ஆய்வரங்கம்







இலங்கை முஸ்லிம்களிடையே வரலாற்றுப் பிரக்ஞை (History consciousness) குறைவடைந்துவரும் இக்காலகட்டத்தில் ஆய்வாளர்களது ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் அதிகரிக்கும் நோக்கில் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு தொடர்பிலான இரண்டாவது ஆய்வரங்கத்தை (Annual Symposium) அக்கரைப்பற்றில் அமைந்துள்ள எம்.ஐ.எம்.முஹியத்தீன் ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் நிலையம் சென்ற சனிக்கிழமை கொழும்பு தபால் தலைமையகக் கேட்போர் கூடத்தில் மிகச்சிறப்பாக நடாத்தியது.

இலங்கை முஸ்லிம்களது வரலாறு தொடர்பான அறிவை மேம்படுத்தல் ஆய்வறிவை (Research Findings) முன்வைப்பதற்கான களத்தை ஏற்படுத்தல், ஆய்வறிவைப் பகர்தல் (Exchange of knowledge) கலந்துரையாடல் ஆகியவைகளை மிக முக்கியமாகவும் வரலாற்று ஆய்வுகளில் ஆய்வு முறையியல், விஞ்ஞானபூர்வ அணுகுமுறை தொடர்பான அக்கறையை அதிகரிக்கச் செய்தல்.

போன்ற விடயங்கள் தொடர்பாகவும் முஸ்லிம் எழுத்தாளர்களையும் ஆய்வாளர்களையும் ஊக்குவிப்பதையும் அவர்களுக்கு ஓர் உந்து சக்தியைக் கொடுப்பதுமே இந்த ஆய்வரங்கின் முக்கிய நோக்கமாகும்.

தலைமை உரையையும் வரவேற்புரையும் நிலையத்தின் ஆளுநர் சபைத்தலைவர் பொறியியலாளர் ஜெளபர் இஸ்மாயில் நிகழ்த்தினார். இந்த ஆய்வரங்கில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை இருக்கைப் பேராசிரியராக (Professor of History-Chair) பணியாற்றும் பேராசிரியர் நிர்மால் ரஞ்சித் தேவதிறி பிரதான நோக்க உரையை மிகவும் ஆழமாகவும் விரிவாகவும் (Keynote Speech) நிகழ்த்தினார்.

பேராதனைப் பல்கலக்கழக மெய்யியல் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ் 'கல்பிட்டியின் தொன்மையும் முஸ்லிம்களது வரலாற்றுப் பின்னணியும்' எனும் மகுடத்திலான ஆய்வுரையையும் கொழும்பு பல்கலைக்கழக பொதுக்கொள்கை மற்றும் அரசியல் விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.எஸ்..அனீஸ் இலங்கையின் வட மாகாண முஸ்லிம்கள் மீதான இனச் சுத்திகரிப்பில் மறைந்திருந்த யதார்த்தம் யாழ் மாவட்டத்தில் வெளியேறாத நயினாதீவு முஸ்லிம்கள் பற்றிய ஒரு விசேட கண்ணோட்டம்.பற்றியும் மிகவும் உள்ளத்தை தொடும் வகையில் மிக உருக்கமாக எடுத்துரைத்தார். இதனையடுத்து எழுத்தாளர், பன்னூலாசிரியர் வரலாற்று த்துறை ஆய்வாளர் கலாநிதி றஊப் செயின், கொழும்பு முஸ்லிம்களது வரலாறு தொடர்பாகவும் இசட்.ஏ.ஸன்ஹிர்.

இந்நிலையத்தின் பிரதம நிறைவேற்றுச் செயலாளரும் எழுத்தாளரும் விமர்சகரும், ஆய்வாளருமான சிராஜ் மஷ்ஹூர், தென்கிழக்கு முஸ்லிம்களின் வரலாற்று வரைவு

மீதான மறுவாசிப்பும் புதிய ஆய்வுப் பார்வையின் தேவையும்.' என்ற மகுடத்திலும் சட்டத்தரணி ருதானி சாகிர், 19 ஆம் நூற்றாண்டு மருதமுனை: வர்த்தகப் பரிமாற்றம், ஆன்மீக வலையமைப்பு, அரேபியக் குடியேற்றம் மற்றும் வரலாற்றுப் பங்களிப்பு பற்றியும், ' வரலாற்றுத்துறை சிறப்பு பட்டதாரி எஸ்.எம்.பாத்திமா சிம்லா மாவடிப்பள்ளி கிராம வரலாறு பற்றியும் இளம் ஆய்வாளர் எம்.ஆர்.எம். றிஹாம் – காலி ஹிரும்புரை வாழ் முஸ்லிம்களின் தொன்மைக் கால வரலாறும் மரபு வழி வாழ்வியல் அம்சங்களும்: விவரண நோக்கிலான பகுப்பாய்வையும். தமது ஆய்வுக்கட்டுரைகள் தொடர்பாக நீண்ட தமது கருத்துரைகளையும் வழங்கினர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட புத்தி ஜீவிகள், கல்விமான்கள் மற்றும் பிரமுகர்கள் இவ்வாய்வரங்கு முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை மிகவும் முக்கியமான தொன்றாகும் எனவும் இதுபோன்ற ஆய்வரங்கங்களை மிகவும் பரந்த அடிப்படையில் மேற்கொள்ள அமைப்பாளர்கள் ஆவன செய்ய வேண்டுமெனவும் தேவை ஏற்படின் தாங்களும் உதவ ஆயத்தமாக இருப்பதாகவும் அவர்கள் தமது அபிப்பிராயங்களித்தெரிவித்தனர்.

நிகழ்வின் நினைவாக ஆய்வாளர்களுக்கு ஆய்வுக்கட்டுரைகளின் ஒரு தொகுதி நூல்களை தலைவர் பொறியியலாளர் ஜெளபர் இஸ்மாயில் இருக்கைப் பேராசிரியராகப் (Professor of History -Chair) பேராசிரியர் நிர்மால் ரஞ்சித் தேவதிறி ஆகியோர் வழங்கி வைத்தனர் .

இதேவேளை அக்கரைப்பற்றில் அமைந்துள்ள எம்.ஐ.எம்.முஹியத்தீன் ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் நிலையம் இவ்வாய்வரங்கில் (Annual Symposium) சமர்ப்பிக்கபட்ட ஆய்வுக்கட்டுரைகளை அச்சிடும் பணிகளையும் அமைப்பின் நிறை வேற்றுசெயலாளர் சிராஜ் மஷ்ஹூர் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

அறிஞர் சித்திலெப்பையின் சகாவான ஐ எல்.எம் அப்துல் அஸீஸ், 1907 இல் எழுதிய 'A Criticism of Mr.Ramanathan's Ethnology of the Moors of Ceylon" என்ற நூல்தான், இலங்கை முஸ்லிம்களது வரலாறு தொடர்பாக முஸ்லிம் தரப்பு சார்பில் வெளிவந்த முதல் நூல். அது வெளிவந்து சுமார் 115 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், நமது வரலாற்று அறிவின் நிலவரம், திசைவழி எப்படி உள்ளது என்று அலசி ஆராய்வதும் அவை யாவற்றையும் எழுத்துவடிவில் கொண்டுவருவதும் உணரப்பட்டுள்ளது.

1984 இல் பேருவளை ஜாமிஆ நளீமியாவின் ஓர் அலகான இஸ்லாமிய ஆய்வுக்கான நளீமிய்யா நிறு வனமும் (NIIR), இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிலையமும் (ICES), இணைந்து ஏற்பாடு செய்த வரலாற்று ஆய்வரங்கு, அந்த வகையில் மிக முக்கியமானது. இதன் விளைவாகவே னுச.எம்.ஏ.எம். சுக்ரி தொகுத்த 'Muslims of Sri Lanka: Avenues to Antiquity' என்ற பிரபலமான நூல் வெளிவந்தது.

மறைந்த கலாநிதி லோர்னா தேவராஜா எழுதிய 'Muslims of SriLanka: 1000 years of ethnic harmony' என்ற நூலும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதன் உருவாக்கத்தில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மர்ஹூம் ஏ.சீ.எஸ்.ஹமீத் அவர்களுக்கும் முக்கிய பங்கு இருந்தது.

இதன் பின்னரும் சில முயற்சிகள் நடந்தன. இப்போது ஊர் வரலாறுகள் வெளிவருவது அதிகரித்து வருகிறது. இது வரவேற்கத்தக்க விடயம். ஆனால், அவற்றில் பெரும்பாலா னவை ஊர்ப் பெருமிதங்களாகவும் கதைகளாகவுமே உள்ளன. இருந்தும் இவை ஆய்வு முறையியல், விஞ்ஞான பூர்வமான அணுகுமுறை என்பன இவற்றில் மிகவும் குறைவவாகவும் சிலவற்றில் அறவே இல்லை.என்று சொல்லுமளவுக்கு உள்ளது. வெளிவரும் நூல்கள் இதுபோன்ற குறைபாடுகள் அல்லாத நூல்களாக அமைய வேண்டுமென்பதே எம்.ஐ.எம்.முஹியத்தீன் ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் நிலையத்தின் எதிர்பார்ப்பாகும்.





# மஹகொட அஹதிய்யாவின் வெள்ளி விழாவையொட்டிய இப்தார் நிகழ்வு

**(பேருவளை பீ.எம். முக்தார்)**

பேருவளை, மஹகொட அஹதிய்யா தஹம் பாடசாலையின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட விசேட இப்தார் (நோன்பு துறக்கும்) நிகழ்வு அண்மையில் பேருவளை மருதானை பீ.ஆர். வரவேற்பு மண்டபத்தில் மிக விமர்சையாக நடைபெற்றது.

அஹதிய்யா தஹம் பாடசாலையின் தலைவர் ஏ.ஐ.எம். ரியாஸ்தீனின் வழிகாட்டலில், அதிபர் பி.எஸ். எம். சியாஸ், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரினால் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வு சமய நல்லிணக்கத் தையும் சமூக ஒற்றுமையையும் வலியுறுத்தி நடைபெற்ற ஒரு நிகழ்வாக அமைந்திருந்தமை விசேட அம்சமாகும்.

இந்நிகழ்வில் அரசியல் மற்றும் சிவில் சமூகத்தைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். முன்னாள் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன, பேருவளை நகர பிதா மபாஸிம் அஸாஹிர், பேருவளை பிரதேச சபைத் தலைவர் பைஸான் நைஸர், உள்நாட்டலுவல்கள் அமைச்சைச் சேர்ந்த ரஞ்சின் பீ. பெரேரா, மௌலவிகளான நுஸ்கான் இர்ஷாதி, பஸ்லான் அஷ்ரபி உட்பட பேருவளை பிரதேச செயலகப் பிரிவின் மரண விசாரணை அதிகாரி நஸ்ரின் நஸீர், பேருவளை பிரதேச செயலகப் பிரிவின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் ஏனைய அரச அதிகாரிகள், மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளும் கலந்து கொண்டனர்.







# புத்தளம் மாநகர சபை எல்லைக்குள் பிரத்தியேக உயர் தர வகுப்புக்கள் ஏப்ரல் 20க்கு பின்


## மாநகர சபை தீர்மானம் நிறைவேற்றம்

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

2028ம் ஆண்டுக்கான உயர்தர பிரத்தியேக வகுப்புகளை புத்தளம் மாநகர எல்லைக்குள் .2026 ஏப்ரல் 20 ம் திகதிக்கு முன் ஆரம்பிக்க தடை விதித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கடந்த வாரம் நிறைவடைந்த க.பொ. த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான பௌதீக மற்றும் உயிரியல் விஞ்ஞான மாணவர்களுக்கான பிரத்தியேக மேலதிக வகுப்புகள் அதிக வியாபார போட்டித் தன்மை காரணமாக பரீட்சை முடிவடைந்த அடுத்த தினமே ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை பெற்றோர் மத்தியில் அதிருப்தி நிலையை ஏற்படுத்தி இருந்தது இதனைக் கருத்தில் கொண்டு மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மேயர் ரின்ஷாட் அஹமட் தெரிவித்துள்ளார்

# அமெரிக்க - இஸ்ரேல் கூட்டு ஆக்கிரமிப்பும் இலங்கையில் ஏற்படும் பொருளாதார பாதிப்பும்



எம்.எஸ். அமீர் ஹுசைன்





சர்வதேச பொலீஸ் காரன் என்று கருதப்படுகின்ற அமெரிக்காவும் ஆக்கிரமிப்பாள நாடான இஸ்ரேலும் இணைந்து 2026.02.28 ஆம் திகதி ஈரானின் தெஹ்ரான் மீது நடத்திய ஏவுகணைத் தாக்குதல் காரணமாக அந்நாட்டின் ஆயுள் கால தலைவர் ஆயதுல்லா அலி கொமெய்னி உட்பட அதி உயர் அதிகாரிகள் பலர் கொல்லப் பட்டனர். இந்த தாக்குதலால் ஈரானின் இருதயமே ஆடிப் போனது போன்ற உணர்வு ஏற்பட்டிருக்கின்றது. சுமார் 2 நிமிடங்களுக்கும் குறைவான நேரம் மேற்கொள்ளப்பட்ட அதி நவீன ஏவுகணைத் தாக்குதல் மூலம் ஈரானின் அதி உயர்பீட தலைவர்கள் பலர் மொத்தமாக கொல்லப்பட்டனர். 100 அடிக்கு கீழ் அமைக்கப்பட்டிருந்த நிலத்திற்கு கீழான பாதுகாப்பு அரணுக்குள் (பங்கர்) கொமெய்னி தலைமையிலான உயர் மட்ட குழுவினர் அன்றைய நாளின் விஷேட கூட்டம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்த போதே அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் அதி நவீன உளவு சேவையின் துல்லிய மான கண்காணிப்பின் பின்னர் இந்த தாக்குதல் நடத்தப்பட்டமை உலகை வியப்பில் ஆழ்த்தி இருக்கின்றது.

அதனைத் தொடர்ந்து அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய இரண்டு ஆக்கிரமிப்பு நாடுகளும் இணைந்து 7 ஆவது நாளாக ஈரான் மீது தொடர்ச்சியாக ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலைமை மத்திய கிழக்கில் மீண்டும் போர் மேகங்களை சூழச் செய்து யுத்த அச்சுறுத்தலை ஏற்படுத்தி இருக்கின்றது. ஈரான் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலடியாக ஈரான் தம்மிடம் இருக்கின்ற அதி நவீன ஏவுகணைகளை பயன்படுத்தி மத்திய கிழக்கில் இருக்கின்ற அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் சார்பான நாடுகள் மீது தாக்குதலை நடத்தி வருகின்றது. குவைத், ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார், டுபாய், சவுதி அரேபியா, ஓமான் மற்றும் லெபனான் உள்ளிட நாடுகளில் அமைக்கப்பட்டிருக்கின்ற அமெரிக்க கடற்படை மற்றும் பாதுகாப்பு தளங்கள் மீது இவ்வாறாக ஈரான் பதில் தாக்குதல் நடத்தி வருகின்றது. இந்த மத்திய கிழக்கின் மேற்பரப்பில் ஏற்பட்டிருக்கின்ற யுத்த கொதிப்பு தெற்காசியாவில் இருக்கின்ற மிகச் சிறிய நாடான இலங்கையையும் பாதித்து வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து தொடர்ச்சியாக ஏற்கனவே பாலஸ்தீன நில ஆக்கிரமிப்பை செய்து வந்தது போன்று 1948 ஆம் ஆண்டில் இருந்து மத்திய கிழக்கில் உள்ள பல அரபு நாடுகளை ஆக்கிரமித்து அந்நாடுகளின் தலைவர்களை கொன்றொழித்து நடைமுறையில் இருந்த ஆட்சிகளுக்கு எதிராக கிளர்ச்சிகளை உள்நாட்டில் ஏற்படுத்தி அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தி வந்திருக்கின்றன. அது (Regime Change) அமெரிக்க இஸ்ரேல் சார்பான ஆட்சியாளர்களைக் கொண்ட அமெரிக்க சார்பான பொம்மை ஆட்சி என்று வர்ணிக்கப்படுகின்றது.

இந்த இரு நாடுகளும் இணைந்து மேற்கொண்ட தாக்குதலுக்கு சொல்லப்பட்ட காரணம் ஈரான் அதன் அணு ஆயுத செறிவூட்டலை நிறுத்த வேண்டும் என்றும் அது தொடர்பான உடன்படிக்கையில் கையொப்பமிட்டு உலக அமைதிக்கும் சமாதானத்திற்கும் ஒத்துழைக்க வேண்டும் என்று அமெரிக்கா ஈரானை கேட்டு வந்த போதும் அதற்கு ஈரான் இணங்காததால் அந்நாட்டின் மீது ஆக்கிரமிப்பு செய்ததாக கூறப்படுகின்றது.

ஆனாலும் அமெரிக்காவின் வரலாற்றை எடுத்து நோக்கினால் இவ்வாறான ஆக்கிரமிப்பும் சர்வதேச சட்டங்களை மீறிய தாக்குதல்களும் உலகிற்கு புதியவையல்ல. 1942 ஆம் ஆண்டு ஜப்பானை ஆக்கிரமித்தமை, 1948 ஆம் ஆண்டு ஜப்பான் மீது அணு குண்டை போட்டு 27500 மக்களை கொன்று 16 கி.மீட்டருக்கு மொத்தமாக ஹிரோஷிமா மற்றும் நாகசாக்கி நகரங்களை அழித்து நாசத்தை ஏற்படுத்தியமை, இஸ்லாமிய நாடுகளான ஈராக், லிபியா, சிரியா, எகிப்து, பனாமா, ஹொன்டுராஸ், யெமன், அப்கானிஸ்தான், உக்ரைன், ஹெய்ட்டி, சோமாலியா, வெனிசியுலா என்று அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு மற்றும் தாக்குதல்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

இவ்வாறாக அமெரிக்காவின் தாக்குதல் களுக்கும் ஆக்கிரமிப்புக்கும் அமெரிக்கா முன்வைக்கும் காரணம் அந்நாடுகளில் ஜனநாயகத்தை ஏற்படுத்தல், அதற்கு தேவையான "ரெஜீம் சேன்ஜ்" மற்றும் மனித உரிமைகளை பாதுகாத்தல் என்பதாக அமைந்தாலும் ஒட்டுமொத்தத்தில் அமெரிக்கா எந்த நாட்டை அதன் பொருளாதார, அரசியல் மற்றும் இராணுவ தேவைக்காக அடக்கி ஒடுக்க வேண்டும் என்று நினைக்கின்றதோ அந்த நாட்டின் மீது எந்த நேரத்திலும் ஊடுருவி ஆக்கிரமிப்பை செய்வது உலக நியதியாக மாற்றி இருக்கின்றது.

இஸ்ரேலை பாதுகாப்பதற்காக முஸ்லிம் நாடுகளை தாக்கி ஆக்கிரமிப்பு செய்து வருகின்றது. மறுபுரமாக அமெரிக்காவுக்கு ஒத்துவராத எந்த நாடானாலும் ஒன்றில் ஆக்கிரமிப்பு அல்லது உட்பூசல்கள், அரசியல் கிளர்ச்சிகளை ஏற்படுத்துதல் இத்தகைய ஆக்கிரமிப்பின் மறு வடிவமாகும்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தற்போதைய மத்திய கிழக்கு நிலவரத்தின் போர் அச்ச நிலைமைகள் உலக நாடுகள் சிலவற்றின் பொருளாதாரத்தை நிலை குலைய வைக்கும் அளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. அந்த வகையில் இலங்கை கடலில் தெற்கு கடல் பரப்பில் 40 மற்றும் 60 கடல் மைல்களுக்கு அப்பால் அமெரிக்காவின் ஏவுகணை தாக்குதல்களுக்கு இலக்கான இரண்டு கப்பல்கள் பற்றியதான தகவல் இலங்கையில் சற்று பதற்ற நிலையை ஏற்படுத்தி இருக்கின்றது. ஏற்கனவே அமெரிக்க நீர்மூழ்கி கப்பலின் 'டேபிடோ' தாக்குதலுக்கு இலக்காகி ஈரானின் IRS Dena என்ற 350 அடி நீளமான அதி நவீன ஆயுதம் தாங்கிக் கப்பல் தீப்பற்றியதால் இலங்கை கடற்படை அதில் இருந்த சிப்பந்திகள் அல்லது ஈரானின் கடற்படை வீரர்கள் 32 பேரை காப்பாற்றி இருக்கின்றது. 101 இற்கும் மேற்பட்ட சடலங்களையும் மீட்டிருக்கின்றது. அடுத்ததாக 2026.03.03 ஆம் திகதியும் ஈரானின் கடற்படைக்கு சொந்தமான மற்றொரு கப்பல் அமெரிக்காவின் தாக்குதலுக்கு இலக்காகி இலங்கை கடற்பரப்பிற்கு அண்மையில் மூழ்கிக் கொண்டிருப்பதாக கடற்படை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதல் இலங்கை போன்ற நாடுகளை எவ்வாறு பொருளாதார ரீதியாக பாதிக்கும் என்பதே பிரதான வினாவாகும்.

மத்திய கிழக்கில் ஹோர்மூஸ் ஜல சந்தியை (கால்வாயை) எண்ணெய் ஏற்றிய கப்பல்கள் போக விடாதபடி ஈரான் தடையை ஏற்படுத்தி இருக்கின்றது அல்லது மூடி இருக்கின்றது. ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலுக்கு பதிலடியாக எண்ணெய் கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்துவது மற்றும் போக்குவரத்து தடையை ஏற்படுத்தும் போது உலகின் பல நாடுகளுக்கான எண்ணெய் விநியோகம் தடைப்படும் அபாயம் ஏற்பட்டிருக்கின்றது.

எந்தவொரு நாட்டிற்கும் எரிபொருள் விநியோகம் துண்டிக்கப்பட்டால் சடுதியாக அதனோடிணைந்த அனைத்து துறைகளும் ஆட்டம் காண ஆரம்பிக்கின்றது.

ஆரம்பத்தில் எண்ணெய் விலை உயர்வு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய தாகும். தற்போதைய நிலையில் உலக சந்தையில் 72 அமெரிக்க டாலருக்கு விற்பனையாகிய மசகு எண்ணெய் ஒரு பீப்பா தற்போது 102 டாலர் வரை கூடி இருக்கின்றது. அதற்கடுத்ததாக எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டால் அனைத்து துறைகளிலும் முடக்கம் ஏற்பட்டு பொருளாதார முடக்கம் ஒன்றுக்கான வழி உருவாகின்றது.

இந்த ஹோர்மூஸ் கால்வாயை மூடியதால் அல்லது கப்பல்கள் போக விடாதபடி தடை ஏற்படுத்தப்பட்டிருப்பதால் 2026.03.01 ஆம் திகதியில் இருந்து இதுவரையில் 600 கப்பல்கள் அளவில் அந்த பிரதேசத்தில் தரித்து இருப்பதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த வழியாகத்தான் ஒருநாளைக்கு 02 கோடி பீப்பாய்கள் எண்ணெய் பிற நாடுகளுக்கு கப்பல்கள் மூலம் கொண்டு செல்லப்படுகின்றன. அவ்வாறு எண்ணெய் ஏற்றிக் கொண்டு பயணிக்கும் கப்பல்களின் எண்ணிக்கை ஒரு மாதத்திற்கு 3000 ஆகும்.

இந்நிலைமைகள் காரணமாக இலங்கையிலும் எரிபொருள் தட்டுப்பாடும் விலை அதிகரிப்பும் ஏற்பட்டு பொருளாதார முடக்கம் அல்லது ஸ்தம்பித நிலை ஏற்படுமா என்று ஆராய்ந்து பார்க்கின்ற போது அத்தகைய நிலைமைகள் இல்லை என்பதே அரசாங்க வட்டாரங்களின் தகவலாகும். அமைச்சர் விஜித ஹேரத் 2026.03.04 ஆம் திகதி பராளுமன்றத்தில் விளக்கமளிக்கையில் இந்த போர் நிலைமை காரணமாக இலங்கைக்கு பாதிப்பு ஏற்பாது. ஆகஸ்ட் மாதம் வரைக்குமான பெற்றோலும் கையிருப்பில் இருப்பதோடு இலங்கை எரிபொருளை கொள்வனவு செய்வது இந்தியா சிங்கப்பூர் மற்றும் ஆபிரிக்கா போன்ற நாடுகளின் எண்ணெய் கம்பனிகள் மூலமாகும். அத்துடன் விலை அதிகரிப்பும் தற்போதைக்கு இடம்பெறாது. அதே நேரம் இந்தியாவுக்கு எண்ணெய் வழங்குவது ரஷ்ய கம்பனியாகும். அதனால் நாட்டில் எதிர்க்கட்சி எண்ணெய் இல்லை என்ற பீதியை ஏற்படுத்தி மக்களை பதற்றப்பட வைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

ஆனாலும் தற்போது எண்ணெய்க் கப்பல்கள் இந்த ஜலசந்தியை தாண்டி போகாமல் முடங்கி இருப்பது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவிக்கையில் கப்பல்களுக்கு விஷேட காப்புறுதி ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அது தொடர்பாக காப்புறுதி கம்பனிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாகவும் தெரிவித்துள்ளார். ஆனாலும் ஏற்கனவே காப்புறுதி கம்பனிகள் கப்பல்கள் போர் சூழலில் பாதுகாப்பற்ற நிலைமைகளை மீறி போக்குவரத்து செய்து போரில் சிக்கி தாக்குதலுக்கு உள்ளானால் காப்புறுதி வழங்க மாட்டோம் என்று அறிவித்திருக்கின்றது.

அதே நேரம் 2026.03.05 ஆம் திகதி இந்த தாக்குதல் மற்றும் ஈரான் மீதான யுத்த நடவடிக்கை தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி அந்நாட்டின் காங்கிரசில் சமர்ப்பித்திருந்த விஷேட பிரேரணை காங்கிரஸ் மூலம் தோற்கடிக்கப் பட்டிருக்கின்றது.

அமெரிக்க அரசியல் அமைப்பின் படி காங்கிரசின் அங்கீகாரம் இல்லாமல் அமெரிக்க ஜனாதிபதிக்கு எந்தவொரு நாட்டின் மீதும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளவோ தாக்கவோ முடியாது என்பதாகும். அதனால் இந்த ஈரான் மீதான தாக்குதல் நடவடிக்கை குறித்து அமெரிக்க மக்களிடமும் காங்கிரஸ் உறுப்பினர்கள் மீது கடும் அதிருப்தி ஏற்பட்டிருக்கின்றது. அதன் காரணமாகவே குறித்த பிரேரணைக்கு ஆதரவாக 47 வாக்குகளும் எதிராக 53 வாக்குகளும் கிடைத் துள்ளன.

எவ்வாறாயினும் இங்கு ஆக்கிரமிப்பு என்று வரும் போது காங்கிஸையோ அல்லது மேலும் உள்ள சாசனங்களையோ அமெரிக்க ஜனாதிபதி கவனத்தில் எடுப்பதில்லை. தாம் செய்ய வேண்டியதை செய்து முடிப்பதே இலக்காகும்.

இவ்வாறானதொரு நிலையில் இந்த யுத்தம் தொடருமானால் ஈரான் அயலில் உள்ள அரபு நாடுகளை இலக்கு வைத்து வஞ்சம் தீர்க்கும் வகையில் தாக்குதல் நடத்தினால் அந்த நாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களது பாதுகாப்பு, தொழில் போன்றவற்றிற்கு பாதிப்பு ஏற்பட்டு நாடு திரும்பும் நிலை ஏற்பட்டால் அது மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தலாம். ஏற்கனவே 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஈராக் மற்றும் குவைத் மோதல் காரணமாக அந்த நாடுகளில் தொழில்புரிந்த இலங்கையர்கள் நாட்டிற்கு திருப்பி அழைக்கப்பட்டனர்.

அது போன்ற நிலைமை ஏற்பட்டால் குவைத், கட்டார், டுபாய், சவுதி அரேபியா, பஹ்ரைன், ஐக்கிய அரபு இராச்சியம், இஸ்ரேல் ஓமான் உட்பட மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரியும் சுமார் 11 இலட்சம் தொழிலாளர்களின் தொழில் மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம். ஆனாலும் தற்போதைக்கு அவ்வாறான ஆபத்து இல்லை என்பதே அங்கிருந்து வரும் தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது. அத்துடன் இந்த நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதி இறக்கும திகளுக்கும் பாதிப்பு ஏற்படலாம். அவ்வாறான பாதிப்புக்கள் இலங்கையின் அந்நிய செலாவணி உள்வரவையும் பாதிக்கச் செய்யலாம்.

எவ்வாறாயினும் இந்த யுத்த நிலைமை தொடருமானால் இலங்கை அதனால் ஏற்படும் பொருளாதார சரிவுக்கு தீர்வு காண வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு தள்ளப்படுவது உறுதி.








# வெற்றிகரமாக நடைபெற்ற கஹட்டோவிட்ட அல் முஸ்தபவிய்யாவின் முப்பெரும் விழா

**தொகுப்பு: எம்.ஆர்.லுதுபுள்ளாஹ்**

கஹட்டோவிட்ட அல் பத்ரியாவில் வாரந் தோறும் ஞாயிற்றுக்கிழமை தினங்களில் இடம்பெற்று வரும் அல் முஸ்தபவிய்யா அஹதிய்யா பாடசாலையின் 20 வருட பூர்த்தி விழா , 1500 ஆவது மீலாதுன் நபி விழா ,பரிசளிப்பு விழா என்பன அடங்கிய முப்பெரும் விழா கடந்த 14/02/2026 சனிக்கிழமை கஹட்டோவிட்ட முஸ்லிம் மகளிர் வட்ட கேட்போர் கூடத்தில் வெகு விமர்சையாகவும் சிறப்பாகவும் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் சமய கலாச்சார பிரதியமைச்சருமாகிய அஷ்ஷேய்கு முனீர் முழப்பர் அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.
நிகழ்வின் கௌரவ அதிதிகளுள் ஒருவராக கலந்து கொண்ட ஒலுவில் பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய கற்கை துறை பேராசிரியர் எஸ். எம். எம் நபீஸ் அவர்கள் கலந்து கொண்டதுடன் சிறப்புரை ஒன்றையும் ஆற்றினார்.
மேலும் எமது ஊரை சேர்ந்த முன்னால் தேர்தல் ஆணையாளர் எம் எம் மொஹம்மத் அவர்களும்,கஹட்டோவிட்ட அல் பத்ரியா மகா வித்தாயாலய பாடசாலை அதிபர் எம்.ஏ.எம் அஸ்மிர் அவர்களும் கௌரவ அதிதியாக கலந்து கொண்டார்கள்.
நிகழ்வின் விசேட அதிதியாக அகில இலங்கை அஹதிய்யா மத்திய சம்மேளனத்தின் தலைவர் அல் ஹாஜ் எம்.ஆர்.எம் ஸரூக் அவர்கள் கலந்து கொண்டதுடன் சிறப்புரை ஒன்றையும் நிகழ்த்தினார்கள்.
அஹதிய்யாவின் முப்பெரும் விழாவில் விசேட பேச்சாளராக கஹட்டோவிட்ட முஅஸ்கருர் ரஹ்மான் மகளிர் அரபுக்கல்லூரியின் பணிப்பாளரும் மாத்தறை மீரா அஹதிய்யாவின் அதிபரும் நாடறிந்த பேச்சாளருமாகிய மௌலவி அல் ஹாஜ் இக்ராம் பாஸி ஹஸ்ரத் அவர்கள் கலந்து சிறப்பான மார்க்க உபண்ணியாசம் ஒன்றை நிகழ்த்தினார்கள்.
நிகழ்வில் முன்னால் இலங்கை கல்வி அமைச்சின் புத்தக வெளியீட்டு குழுவின் முன்னால் அதிகாரி அஷ்ஷெய்க்ஹ் அப்துர்ரஹ்மான் நளீமி அவர்களும் ,இலங்கை ஒலி பரப்பு கூட்டுத்தாபன முன்னால் முஸ்லிம் சேவைப் பணிப்பாளர்



அல் ஹாஜ் எம் இஸட் அஹ்மத் முனவ்வர் அவர்களும் ,கொழும்பு மாவட்ட அஹதிய்யா சம்மேளனத்தின் செயலாளர் அவர்களும் , கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிக்கா வித்தியாலயத்தின் அதிபர் கௌரவ ஸர்ஜுன் ஸேர்,முஹிய்யத்தீன் ஜும்மா பள்ளிவாசல் கதீப் மௌலவி பர்ஸான் முர்ஸி,திறமைக்கும் நீதிக்குமான அமைப்பின் தலைவர் கியாஸ் மொஹம்மத் ,ஓய்வு பெற்ற கணித பாட ஆசிரியர் ஜமால்தீன் ஸேர் , அத்தனகல்ல பிரதேச சபை உறுப்பினர் இன்சாப் மற்றும் கஹட்டோவிட்ட அபிவிருத்தி குழு மற்றும் வட்டார சபை தலைவர் மொஹம்மத் ஜவாத் சட்டத்தரணி அஸ்லம் அவர்களும் கஹட்டோவிட்ட பள்ளிவாசல் தலைவர்கள்,கதீப்மார்கள் ,உலமாக்கள் ,ஆலிமாக்கள் என்போரும் சிறப்பு அதிதிகளாக கலந்து நிகழ்வை சிறப்பித்தார்கள்.
அஹதிய்யாப் பாடசாலை நிர்வாக சபை உறுப்பினரும் பிரதேச சபை உறுப்பினரும் மாணவர்களுக்குரிய பரிசில்களை தனது குடும்ப உறுப்பினர் ஒருவர் மூலமாகவும் லுஆஆயு அநுசரணையுடனும் பெற்றுக் கொடுத்தவருமாகிய அல் ஹாஜ் பிர்தௌவ்ஸ் அவர்கள் நிகழ்வின் வரவேற்புரையை நிகழ்த்தினார்கள்.
நிகழ்வின் நோக்கம் மற்றும் அஹதிய்யாவின் விழாபற்றியும் தலைமை உரையாகவும் தற்போதைய அஹதிய்யா பாடசாலையின் அதிபர் ஏ.பி.இக்ராம் அஹ்மத் அவர்கள் நிகழ்த்தினார்கள்.
நிகழ்ச்சியின் போது கடந்த ரமழானில் நடை பெற்ற மாணவர்களுக்கிடையேயான போட்டி நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்களுக்கும் , அஹதிய்யாவின் பரீட்சைகளில் சித்தியடைந்தோருக்குமான சான்றிதழ்களும் பிரதம அதிதிகளின் கரங்களாலும், விசேட அதிதிகளின் கரங்களாலும், கௌரவ அதிதிகளின் கரங்களாலும் அஹதிய்யாவின் முன்னால் இந்நாள் நிர்வாகிகளின் கரங்களாலும் ஊர்ப்பிரமுகர்களின் கரங்களாலும்,விசேட சொற்பொழிவாளரின் கரங்களாலும் வழங்கிவைக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.
இந்த முப்பெரும் விழாவை முன்னிட்டு கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும் பிரதியமைச்சருமாகிய அஷ்ஷேய்க் முனீர் முழப்பர்,அஹதிய்யா மத்திய சம்மேளனத்தின் தலைவர் அல் ஹாஜ் ஸஷரூக்,முன்னால் தேர்தல் ஆணையாளர் எம்.எம் மொஹம்மத், கஹட்டோவிட்ட அல் பத்ரியாவின் அதிபர் எம்.ஏ.எம் அஸ்மிர் விசேட சொற்பொழிவாளராக கலந்து கொண்ட மௌலவி இக்ராம் பாஸி ஹஸ்ரத் ,கௌரவ அதிதியாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய கலாநிதி எஸ். எம்.எம் நபீஸ் ஆகியோருக்கு விழாவை முன்னிட்டு நினைவு சின்னங்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.
1500 ஆவது மீலாதுன்நபி வருடத்தை முன்னிட்டு கஹட்டோவிட்ட அல் பத்ரியாவுக்கு அல் முஸ்தபவிய்யாவின் முப்பெரும் விழாவை முன்னிட்டு நினைவு பரிசு ஒன்றையும் முன்னால் அதிபர் அல் ஹாஜ் பிர்தௌவ்ஸ் ஹாஜியார் மற்றும் பாடசாலை அதிபர் இக்ராம் முன்னால் அதிபர் அல் ஹாஜ் ஜிப்ரி ஆகியோர் இணைந்து பத்ரியாவின் அதிபர் எம்.எம்.ஏ அஸ்மிர் அவர்களுக்கு வழங்கி வைத்தமையும் குறிப்பிடத்தக்கது.
நிகழ்வின் இறுதியில் அஹதிய்யா பாடசாலையின் முன்னால் அதிபரும் இப்போதைய இணைத்தலைவருமான அல் ஹாஜ் ஜிப்ரி அவர்களினால் நன்றியுரை நிகழ்த்தப்பட்டதுடன் இதனை தொடர்ந்து துஆ ஸலவாத்துடன் முப்பெரும் விழா இனிதே நிறைவுற்றது.
இந்நிகழ்வில் அஹதிய்யா பாடசாலை ஆசிரியர்கள் ,மாணவ மாணவிகள் , பழையமாணவர்கள் கஹட்டோவிட்டாவிலுள்ள நபவிய்யா மற்றும் பாதிபிய்யா ஷாதுலிய்யா தரீக்காக்களின் முக்கியஸ்தர்கள் மற்றும் சகோதரர்கள் கஹட்டோவிட்ட முஅஸ்கருர்ரஹ்மான் மகளிர் அரபுக் கல்லூரி அதிபர் மற்றும் முஅல்லிமாக்கள் மாணவிகள், கஹட்டோவிட்ட அல் மத்ரஸதுல் முஸ்தபவிய்யாவின் அதிபர் மற்றும் ஆலிம்கள் மாணவர்கள் பெற்றோர்கள், அஹதிய்யா பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் என்று பலரும் கலந்து சிறப்பித்ததோடு மண்டபத்தை நிரம்பி வழியச்செய்திருந்தமை சிறப்பம்சமாகும்.
இந்நிகழ்வுகளை ஊரின் பிரபல கணித பாட ஆசிரியரும் பிரபல அறிவிப்பாளருமான ஆசிரியர் இக்பால் நாஸர் அவர்கள் தொகுத்து வழங்கினார்கள்.








# ஹாஷிம் உமர் பவுண்டேஷன் அணுசரனையில் சியனே ஊடக வட்ட இப்தார் நிகழ்வு

**எஸ்.ஏ.எம். பவாஸ்**

சியனே ஊடக வட்டத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி சனிக்கிழமை கஹட்டோவிட்ட முஸ்லிம் லேடீஸ் ஸ்டடி சேர்கில் மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.
சியனே ஊடக வட்டத்தின் தலைவரும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையின் முன்னாள் பணிப்பாளருமான அல்ஹாஜ் எம்.இசட். அஹமட் முனவ்வர் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெற்றது.
இந்நிகழ்வில் விசேட அதிதிகளாக சிரேஷ்ட ஊடகவியலாளர்களான யூ.ஐ. யாகூப் (முன்னாள் பிரதிப் பணிப்பாளர், ரூபவாஹினி தமிழ் செய்திப் பிரிவு), சித்தீக் ஹனீபா (முன்னாள் முகாமையாளர், ஐ.டி.என் தமிழ் செய்திப் பிரிவு) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.
மேலும், இந்த நிகழ்வில் பிரதேசத்திலுள்ள அரச அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், உலமாக்கள், ஊடகவியலாளர்கள், பள்ளிவாசல்களின் நிர்வாக சபை உறுப்பினர்கள், ஊர் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை சிறப்பம்சமாகும்.
ரமழான் மாதத்தின் புனிதத்துவத்தையும், சமூக ஒற்றுமையையும் வலியுறுத்தும் வகையில் அமைந்த இந்நிகழ்விற்கு ஹாஷிம் உமர் பவுண்டேஷன் பூரண அனுசரணையினை வழங்கியிருந்தது.










NSC
National Shoora Council
ජාතික උපදේශක සභාව | தேசிய ஆலோசனை சபை | The National Consultative Council
National Shoora Council, PO Box 2304, Colombo, Sri Lanka | Mobile : +94 766 270 470 | Tel/ Fax : +94 114 546 546
Email : office@nationalshoora.com | Web : www.nationalshoora.com

# பயங்கரவாத தடைச் சட்டத்தை விட (PSTA) ஆபத்தானது.

## புதிய சட்டமூலத்தைக்கைவிடக் கோரி 14 முஸ்லிம் அமைப்புகள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

**தேசிய சூரா சபையின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி ரஷீத் எம்.இம்தியாஸினால் வெளியிடப்பட்ட அறிக்கை**

தேசிய அளவிலான பதினான்கு முஸ்லிம் சமூக அமைப்புகள் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்கு எழுதியுள்ள கூட்டுக் கடிதத்தில், உத்தேசிக்கப்பட்டுள்ள 'பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும்' (PSTA) சட்டமூலமானது தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTA) விட மிகவும் கொடியது எனத் தெரிவித்துள்ளன.
தற்போதைய சட்டத்தை எந்தவொரு மாற்றுச் சட்டத்தையும் குறிப்பிடாமல் முற்றிலுமாக ஒழிப்பதாக தேசிய மக்கள் சக்தி (NPP) தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது!
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷ நாணயக்காரவுக்குப் பிரதியிடப்பட்டு, ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட 28.02.2026 தேதியிட்ட கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:
"பொருளாதார வீழ்ச்சி, காலநிலை அனர்த்தங்கள், ஊழல் மற்றும் இன-மத பதட்டங்களில் இருந்து மீண்டு வரப் போராடும் அதேவேளை, தன்னிறைவு, வெளிநாட்டு முதலீடுகள், சுற்றுலா, ஏற்றுமதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டை ஊக்குவிப்பதற்காக உழைக்கும் ஒரு நாட்டில், உத்தேசிக்கப்பட்டுள்ள இந்தப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உலகளாவிய ரீதியில் இலங்கைக்கு ஓர் அச்சமூட்டும் பிம்பத்தை ஏற்படுத்தும். எனவே, தேசிய நலன் கருதி இது கைவிடப்பட வேண்டும்."
நாட்டின் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் சட்டங்களின் அவசியத்தை NSC தலைமையிலான அமைப்புகள் ஏற்றுக்கொண்டுள்ளன. எனினும், பயங்கரவாதத்தைக் கையாள்வதற்குப் போதுமான வகையில் பாதுகாப்புத் துறைக்குப் பரந்த அதிகாரங்களை வழங்கும் பல புதிய சட்டங்கள் ஏற்கனவே இயற்றப்பட்டுள்ளதை அவை சுட்டிக்காட்டியுள்ளன. அத்துடன், எந்தவொரு அவசரநிலையையும் கையாள்வதற்குப் பொதுப் பாதுகாப்புச் கட்டளைச்சட்டம் ஜனாதிபதிக்கும் படைகளுக்கும் அபரிமிதமான அதிகாரங்களை வழங்கியுள்ளது.
இலங்கையின் தேசிய நலனை எந்தவொரு வெளிநாட்டுச் சக்திக்கும் அல்லது நிழல் அரச (deep state) நிறுவனங்களுக்கும் அடிபணியச் செய்ய வேண்டாம் எனவும் சிவில் சமூக அமைப்புகள் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளன.
இந்தக் கூட்டுக் கடிதத்தில், புதிய சட்டமூலம் PTA-ஐ விட ஏன் மிகவும் கொடியது என்பதற்கான காரணங்களாக PSTA-வில் உள்ள ஒன்பது சரத்துகளை அந்த அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை இதற்கான சில காரணங்களாகும்:
வெளிநாட்டு அரசாங்கங்கள் அல்லது சர்வதேச நிறுவனங்களுக்கு எதிரான நியாயமான போராட்டங்களுக்கு PSTA இன் கீழ் இடமில்லை:
PSTA இலங்கையின் அரசாங்கத்தை மட்டுமன்றி "வேறு எந்தவொரு அரசாங்கம் அல்லது சர்வதேச அமைப்பையும்" பாதுகாப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.
இது இலங்கை மக்கள் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தடுக்கிறது: உதாரணமாக, (அ) இலங்கைக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் மோசமான காலநிலை மாற்றத்தை ஏற்படுத்தும் சுற்றுச்சூழல் மாசுபாட்டைத் தொடர்வதிலிருந்து சீனா, அமெரிக்கா அல்லது இந்தியா போன்ற வெளிநாட்டு அரசாங்கங்களை நிர்ப்பந்திக்கக் கோரி ஆர்ப்பாட்டம் செய்தல், அல்லது (ஆ) இலங்கையர்களின் வாழ்க்கைச் செலவைப் பாதிக்கும் வகையில் வல்லரசு நாடுகள் தன்னிச்சையாக விதிக்கும் கட்டணங்களுக்கு எதிராகப் போராடுதல். இலங்கையர்களின் இத்தகைய செயற்பாடுகள் PSTA இல் முன்மொழியப்பட்டுள்ளபடி "பயங்கரவாதச் செயல்களாக" கருதப்படும். இது ஜனநாயக விரோதமானதுடன், கொடூரமான PTA சட்டத்தில் கூட காணப்படாத ஒன்றாகும்!
PSTA இன் கீழ் விளக்கமறியல் அல்லது தடுப்புக்காவல் காலம் குறைக்கப்படுவதற்குப் பதிலாக இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது:
விசாரணையின்றி ஒரு வருட காலம் விளக்கமறியலில் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்படுவது அரசியலமைப்பின் 13(4) ஆம் உறுப்புரையின் விதிவிலக்குகளுக்கு முரணான ஒரு தண்டனையாகும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் PTA இன் கீழான பல வழக்குகளில் தீர்ப்பளித்துள்ளது. ஆனால் அரச காவலில் வைக்கும் காலத்தை அதிகபட்சம் மூன்று மாதங்களாகக் குறைப்பதற்குப் பதிலாக, PSTA புதிய வரைவானது அரச காவலின் குறைந்தபட்ச காலத்தை PTA இல் உள்ள 1 வருடத்திலிருந்து (2022 இன் 12 ஆம் இலக்க திருத்தம்) 2 வருடங்களாக நீட்டித்துள்ளது. நீதித்துறை பிணை வழங்குவதற்கான இந்த இரண்டு வருட காலப்பகுதியை, நிறைவேற்று அதிகாரியான பாதுகாப்புச் செயலாளரின் தடுப்புக்காவல் உத்தரவின் (Detention Order) மூலமாக இல்லாமலாக்க முடியும்!
வெகுஜன ஊடகங்கள் மீண்டும் ஒருமுறை பயங்கரவாத வலையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன:
அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள், இணையம், தனிப்பட்ட கடிதங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் உள்ளிட்ட எங்கும் வெளியாகும் காட்சிகள் மற்றும் எழுத்துக்கள் "பயங்கரவாத வெளியீடு" என PSTA இல் விவரிக்கப்படும் பயங்கரவாத வலையின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இதனை மீறுபவர்களுக்கு அதிகபட்சமாக 15 வருட சிறைத் தண்டனை மற்றும்/அல்லது 15 மில்லியன் ரூபாய் அபராதம் விதிக்கப்படலாம்! PTA சட்டத்திலும் பயங்கரவாத தொடர்பான விசாரணைகள் அல்லது செய்திகளை வெளியிடுவதைத் தடைசெய்யும் ஏற்பாடு அதிகபட்சம் ஐந்து வருட சிறைத்தண்டனையுடன் இருந்தது, ஆனால் இது 2022 இன் 12 ஆம் இலக்க திருத்தம் மூலம் ரத்து செய்யப்பட்டது.
PSTA சட்டமானது PTA ஐ விட மிகவும் கொடூரமானதாகும். மக்களின் கருத்துச் சுதந்திரத்தின் மீதான தாக்குதலுக்கான தளமாக PSTA அமைவதற்கு இது பல உதாரணங்களில் ஒன்றாகும்!
நீதித்துறையின் மீது நிறைவேற்று அதிகாரம் ஆதிக்கம் செலுத்துகிறது
பாதுகாப்புச் செயலாளரின் தடுப்புக்காவல் உத்தரவுகளை நீதவான்கள் அல்லது மேல் நீதிமன்ற நீதிபதிகளால் மீற முடியாது:
சந்தேக நபர்களை அரச காவலில் தடுத்து வைப்பதற்கு "நிறைவேற்று அதிகாரிக்கு", அதாவது பாதுகாப்புச் செயலாளருக்கு (முன்னர் ஜனாதிபதியால் பிரயோகிக்கப்பட்டது) மற்றும் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை முழுமையாக இரத்துச் செய்து, அதனை "நீதித்துறையில்" உள்ள நீதவான்களுக்கு வழங்குவதற்குப் பதிலாக, அமைச்சுச் செயலாளர் ஒருவரால் PSTA இன் கீழ் 'தடுப்புக காவல் உத்தரவுகளை' பிறப்பிக்க முடியும். பிணை அல்லது விளக்கமறியல் குறித்து திறந்த நீதிமன்றத்தில் இரு தரப்பினரையும் விசாரிக்கும் நீதவான்கள் மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதிகளைப் போலன்றி, சந்தேக நபர்களை விசாரிக்காமலேயே அவர்களது சுதந்திரத்தைப் பறிக்க இது வழியமைக்கிறது.
வழக்கு விசாரணை முடியும் வரை பாதுகாப்புச் செயலாளரால் தடுப்புக்காவல் உத்தரவுகள் (DO):
வரைவுச் சட்டத்தின் 58 ஆம் பிரிவானது, பாதுகாப்புச் செயலாளர் ஊடாக ஒரு சந்தேக நபரை கைது செய்யப்பட்ட நாளிலிருந்து விசாரணை முடியும் வரை தடுத்து வைக்க அனுமதிக்கிறது. இது குற்றம் நிஷரூபிக்கப்படும் வரை குற்ற மற்றவர் என்ற அனுமானத்தை கேலிக்கூத்தாக்குவதுடன், சந்தேக நபருக்கு நியாயமான விசாரணைக்கான உரிமையையும் பறிக்கிறது.
நீதிமன்றக் காவலில் உள்ள PSTA சந்தேக நபரை சிறைத்துறை கண்காணிப்பின்றி மீண்டும் பொலிஸ் காவலுக்கு எடுக்க புலனாய்வுப் பொலிஸாருக்கு அதிகாரம்:
வரைவுச் சட்டத்தின் 58(2) பிரிவானது, தடுப்புக்காவல் உத்தரவை (DO) பிறப்பிப்பதன் மூலம் விளக்கமறியல் காவலிலிருந்து சந்தேக நபரை நீக்கி, சிறைச்சாலை அதிகாரிகளின்றி பொலிஸ் காவலில் வைக்க பாதுகாப்புச் செயலாளருக்கு அதிகாரம் அளிக்கிறது. குற்றவியல் விசாரணைகளின் வரலாற்றில் கேள்விப்படாத வகையில், விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே சந்தேக நபர்களை அச்சுறுத்தும் சூழ்நிலையில் வைப்பதும், எதிரிக்கு நியாயமான விசாரணையை மறுப்பதும் இதன் மூலம் நிகழ்கிறது!
இவ்வேற்பாடானது பொலிஸ் காவலில் இருக்கும் போது சித்திரவதைக்கு உள்ளானதாகப் புகாரளிக்க சந்தேக நபர்களை அச்சுறுத்தும்!
சிவில் சமூக அமைப்புகள், தொழிற் சங்கங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் மத அமைப்புகளை எவ்வித உரிய நடைமுறைகளுமின்றி ஜனாதிபதியால் தடை செய்ய முடியும்: "எந்தவொரு அமைப்பும் இந்தச் சட்டத்தின் கீழ் குற்றமாக கருதப்படும் எந்தவொரு செயலிலும் ஈடுபட்டுள்ளது" அல்லது "இலங்கை அல்லது வேறு எந்தவொரு நாட்டின் தேசியப் பாதுகாப்பிற்கும் குந்தகம் விளைவிக்கும் வகையில் சட்ட விரோதமான முறையில் செயற்படுகிறது" என நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளதென ஜனாதிபதி கருதினால் (நீதிமன்றத்தின் மூலம் குற்றம் நிரூபிக்கப்படாமல் அல்லது எந்தவொரு உரிய நடைமுறையுமின்றி ஜனாதிபதியின் நம்பிக்கையின் அடிப்படையில் மட்டுமே), எவ்வித நீதித்துறை தலையீடும் இன்றி உரிய நடைமுறையின்றி விசாரணை அல்லது குறைந்தது அமைப்பிற்கு ஒரு காரணம்காட்டும் அறிவித்தலைக் கூட வழங்காமல், எந்தவொரு அமைப்பையும் தடை செய்வதற்கு PSTA ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிக்கிறது. சிவில் சமூகம் தங்களை விசாரிக்காமலேயே தடை செய்யப்படுவதாக அச்சுறுத்தப்படக்கூடிய மிக விரிவான அதிகாரங்களை PSTA வழங்குகிறது. ஜனாதிபதி முறைமையை முற்றாக ஒழிப்பதாக தனது விஞ்ஞாபனத்தில் உறுதியளித்த ஜனாதிபதிக்கு இது வழங்கப்படுகின்ற ஒரு கொடூரமான அதிகாரமாகும். இந்த ஏற்பாடு சிவில் சமூக அமைப்புகளின் சங்கச் சுதந்திரத்திற்கு மட்டுமன்றி, தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் மத அமைப்புகளுக்கும் ஒரு பாரிய அச்சுறுத்தலாகும்!
பாராளுமன்றச் சட்டம் ஒன்றின் கீழ் அவசரகால அதிகாரங்களை இயல்பாக்குதல்: ஊரடங்கு உத்தரவுகள் (பிரிவு 64), கட்டுப்பாட்டு உத்தரவுகள் (64), PSTA (24) மூலம் ஆயுதப் படைகளுக்கு அதிகாரம் அளித்தல் போன்றவை தற்போது அவசரகால நிலைமை முறையாகப் பிரகடனப்படுத்தப்படும் அசாதாரண சூழ்நிலைகளில் மட்டுமே ஜனாதிபதியால் பயன்படுத்தப் படுகின்றன! உடனடியாக அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்த அரசாங்கத்திற்கு PSTA அதிகாரமளிக்கும் என்பதுடன், மக்களைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு மக்களின் சுதந்திரத்தை மோசமாக அச்சுறுத்தும் அசாதாரண அதிகாரங்களை 'சாதாரண அதிகாரங்களாக' இது இயல்பாக்கும். அத்துடன் இலங்கை ஒரு பொலிஸ் ராஜ்யமாக மாறுவதற்கும் இது வழிவகுக்கும்!
PSTA "பயங்கரவாதம்" என்பதை வரையறுக்கவில்லை, ஆனால் பலவிதமான மற்றும் தவறான வியாக்கியானங்களுக்கு இடமளிக்கக் கூடிய பெருமளவிலான செயல்களை "பயங்கரவாத செயல்கள்" என வகைப்படுத்தியுள்ளது. PTA ஆனது 2 ஆம் பிரிவில் 10 செயல்களை மட்டுமே கொண்டிருந்ததுடன், PSTA ஐ விட தெளிவாகவும் கட்டுப்படுத்தப்பட்ட வகையிலும் அவற்றைக் குறிப்பிட்டிருந்தது. உத்தேச புதிய சட்டமானது குற்றங்களின் விரிவான பட்டியலைக் கொண்டுள்ளதுடன், அவை அனைத்தையும் "பயங்கரவாத செயல்கள்" என்று பெயரிடுகிறது!
பரவலாகக் கண்டிக்கப்பட்ட PTA ஐ விட PSTA மிகவும் கொடூரமானதாக இருப்பதையே நாங்கள் காண்கிறோம். தேசிய நலன் கருதியும், அண்மையில் மேம்படுத்தப்பட்ட சட்டங்கள் போதுமானவை என்பதாலும் PTA சட்டத்தை உடனடியாக ரத்து செய்து PSTA வரைவைக் கைவிடுமாறு நீதி அமைச்சையும் அரசாங்கத்தையும் நாங்கள் வலியுறுத்துகிறோம்!

1. தேசிய ஷூரா சபை
2. RPSL கூட்டமைப்பு
3. அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிபர் முன்னணிகளின் சம்மேளனம்
4. அகில பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் சங்கம்
5. இலங்கை மலாய் மக்களின் மாநாடு
6. ஸ்ரீலங்கா ஜமாஅத்தே இஸ்லாமி
7. இலங்கை கதீப்கள் மற்றும் முஅத்தின்கள் சங்கம்
8. ஸலாமா சங்கம்
9. அல் முஸ்லிமாத்
10. இஸ்லாமிய கற்கைகளுக்கான நிலையம்
11. ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம்
12. அஹதிய்யா சம்மேளனம்
13. அகில இலங்கை தவ்ஹீத் ஜமாஅத்
14. சிலோன் முஸ்லிம் வாலிபர் சங்கம்
15. ஜம்இய்யதுல் அன்ஸாரி சுன்னத்தில் முஹம்மதிய்யா
16. உலக கலாசார, அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம்

# நோன்புப் பெருநாளைக்கு விசேட பொது விடுமுறை வழங்குக:

**ஜனாதிபதியிடம் இம்ரான் மஃரூப் எம்.பி. கோரிக்கை!**

(எஸ்.ஏ. பறூஸ்)

எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு நோன்புப் பெருநாளை முன்னிட்டு, மார்ச் மாதம் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமையை விசேட பொது விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஃரூப் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

நடைமுறை ஆண்டுக்கான நாட்காட்டியின் பிரகாரம், நோன்புப் பெருநாள் மார்ச் மாதம் 21 ஆம் திகதி சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படும் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இருப்பினும், இஸ்லாமிய மார்க்க முறைப்படி பெருநாள் தினமானது பிறை தெரிவதைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றது.

இலங்கை பிறைக் குழுவின் தீர்மானம் சில நேரங்களில் இரவு வேளையிலேயே அறிவிக்கப் படுகின்றது. இதன் காரணமாக, நாட்காட்டியில் உள்ளபடி சனிக்கிழமைக்கு பதிலாக, மார்ச் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமையே பெருநாள் கொண்டாடப்படுவதற்கான அதிக வாய்ப்புகள் காணப்படு கின்றன.



இவ்வாறான திடீர் மாற்றங்கள் ஏற்படும் போது, சனிக்கிழமை விடுமுறை தினமாக இருந்தாலும், வெள்ளிக்கிழமை அலுவலகங்கள் திறந்திருக்கும். இதனால் முஸ்லிம் அரசாங்க ஊழியர்கள் பெருநாள் தொழுகையில் கலந்துகொள்வதிலும், குடும்பத்தினருடன் நேரத்தைச் செலவிடுவதிலும் பாரிய இக்கட்டான நிலையை எதிர்கொள்வார்கள்.

இந்த நிர்வாகச் சிக்கல்களைத் தவிர்ப்பதற்கும், முஸ்லிம் ஊழியர்கள் எவ்வித தடையு மின்றித் தமது மதக் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் ஏதுவாக மார்ச் 20 ஆம் திகதி வெள்ளிக் கிழமையை முன்கூட்டியே பொது விடுமுறையாக அறிவிப்பது அவசியமாகும்.

நாட்காட்டியின் படி சனிக்கிழமை பெருநாள் வந்தாலும், வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்குவதால் எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. மாறாக, அது அனைத்து சமுதாயத்தினரு க்கும் ஒரு நீண்ட வார இறுதி விடுமுறையாக அமைந்து நன்மையளிக்கும்.

இலங்கையின் அனைத்து இன மக்களையும் அரவணைத்துச் செல்லும் ஜனாதிபதியின் தலைமையின் கீழ், முஸ்லிம் சமூகத்தின் இந்த நியாயமான கோரிக்கை நிறைவேற்றப்படும் எனத் தான் எதிர்பார்ப்பதாக இம்ரான் மஃரூப் எம்.பி. தனது கடிதத்தில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மௌலவி இனாமுல்லாஹ் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்



மன்னார் மாவட்டம் முசலிப் பிரதேசத்தின் கொண்டாச்சியைச் சேர்ந்த முஹம்மது கௌது,ஹாஜரா உம்மா தம்பதியினரின் புதல்வர் இனாமுல்லா ஸலஃபி (05/03/2026) புத்தளம் மாவட்ட நீதிவான் கே.சதுராணி கொடித்துவக்கு முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் தனது ஆரம்ப கல்வியை கொண்டச்சி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பயின்றார். தொடர்ந்து மார்க்கக் கல்வியை தாருத் தௌஹீத் அஸ்ஸலபிய்யா கலா பீடத்தில் நிறைவு செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பேருவளை கல்வி அறக்கட்டளையின் இப்தார் நிகழ்வும் கலந்துரையாடலும்







(பீ.எம். முக்தார்)

பேருவளை அப்ரார் கல்வி அறக் கட்டளையின் இப்தார் நிகழ்வும் விசேட கலந்துரையாடல் நிகழ்வும் பேருவளை மொல்லியமல அல்ஹாஜ் ஹசன் பாஸியின் இல்லத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுகளில் அதன் தலைவர் கலாநிதி அஸ்வர் அஸாஹிம், அறக்கட்டளையின் ஸ்தாபகர், முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், அறக்கட்டளையின் செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட அங்கத்தவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

குறைந்த வருமானம் பெறும் மாணவர்கள் தங்கள் கல்வியைத் தொடர உதவும் வகையில் புலமைப்பரிசில் வழங்குவதற்காக இக்கல்வி அறக்கட்டளை ஸ்தாபிக்கப்பட்டதோடு, இதனால் பல மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

முஸ்லிம் மாணவர்க ளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பாடசாலைகளைச் சேர்ந்த சிங்கள மாணவர்களுக்கும் இந்த புலமைப்பரிசில் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




**பயாஸா பாஸில்**

# சர்வதேச மகளிர் தினம் - 2026

### "பெண்களின் தலைமைத்துவம் -செழிப்பான தேசத்தின் பெருமை"

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8ஆம் தேதி உலகம் முழுவதும் கொண்டாடப்படும் International Women's Day என்பது பெண்களின் உரிமைகள், சாதனைகள் மற்றும் சமூக முன்னேற்றங்களை போற்றும் உலகளாவிய நாளாகும். 2026ஆம் ஆண்டின் தொனிப்பொருள் "பெண்களின் தலைமைத்துவம் – செழிப்பான தேசத்தின் பெருமை" என்பது, பெண்களின் முன்னேற்றம் ஒரு குடும்பத்தின் வளர்ச்சியையும், ஒரு சமூகத்தின் நிலைத் தன்மையையும், ஒரு நாட்டின் செழிப்பையும் நிர்ணயிக்கிறது என்பதை வலியுறுத்துகிறது.

### தலைமைத்துவம் - பெண்களின் இயல்பான வலிமை

தலைமைத்துவம் என்பது பதவியோ அதிகாரமோ அல்ல் அது பொறுப்புணர்வு, தன்னம்பிக்கை, தீர்மான திறன், மனிதநேயம் மற்றும் சேவை மனப்பான்மை ஆகியவற்றின் சங்கமமாகும். பெண்கள் குடும்பத்தில் தாயாக, ஆசிரியையாக, சமூகத்தில் வழிகாட்டியாக, நாட்டில் நிர்வாகியாக தலைமை வகித்து வருகின்றனர்.

இலங்கையில் Sirimavo Bandaranaike உலகின் முதல் பெண் பிரதமராக உயர்ந்து, பெண்களின் அரசியல் தலைமைத்துவத்திற்கு உலகளவில் புதிய வழியைத் திறந்தார். ஊாயனெசமைய முரஅயசயவரபெய தனது ஆட்சிக் காலத்தில் பல சமூக மாற்ற முயற்சிகளை முன்னெடுத்தார்.

உலக அரங்கில் Angela Merkel தனது உறுதியான மற்றும் சமநிலையான தலைமைத்துவத்தால் பல ஆண்டுகள் ஜெர்மனியை முன்னேற்றப் பாதையில் நடத்தினார்.

இவை அனைத்தும் பெண்கள் தலைமை ஏற்றால் நிலைத்த வளர்ச்சி சாத்தியம் என்பதை நிரூபிக்கின்றன.

### கல்வி - பெண்களின் முன்னேற்றத்தின் அடித்தளம்

ஒரு பெண் கல்வி கற்றால் ஒரு தலைமுறை கல்வியறிவு பெறுகிறது என்று கூறப்படுகிறது. கல்வி பெண்களுக்கு சுயநம்பிக்கை அளிக்கிறது் சமூகத்தில் தன்னம்பிக்கையுடன் நிற்க வலிமை தருகிறது.

இன்றைய உலகில் பெண்கள் மருத்துவம், பொறியியல், தகவல் தொழில்நுட்பம், சட்டம், கலை, விளையாட்டு உள்ளிட்ட பல துறைகளில் சிறந்து விளங்குகின்றனர்.

கிராமப்புறங்களில் கூட பெண்கள் தொழில் முனைவோராக உருவெடுத்து குடும்பத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்துகின்றனர். சுயஉதவி குழுக்கள், சிறு கடன் திட்டங்கள், கூட்டுறவு அமைப்புகள் மூலம் பெண்கள் பொருளாதார சுயநிலையை அடைந்து வருகின்றனர்.

### பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கு

ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கும்போது, அந்த நாட்டின் வளர்ச்சி விகிதமும் உயரும். பெண்கள் தொழில் துறையில் முன்னேறுவதால் வேலைவாய்ப்பு அதிகரிக்கிறது,

### குடும்ப வருமானம் உயர்கிறது, வறுமை குறைகிறது.

சிறு மற்றும் நடுத்தர தொழில்களில் பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. வீட்டுத் தொழில்கள், கைவினைத் தயாரிப்புகள், விவசாய சார்ந்த செயல்பாடுகள் ஆகியவை கிராமப்புற பொருளாதாரத்தை வலுப்படுத்துகின்றன. இது சமநிலைமான பிராந்திய வளர்ச்சிக்கும் வழிவகுக்கிறது.



சமூக நீதி மற்றும் பாலின சமத்துவமானது பெண்களின் தலைமைத்துவம் சமூக நீதி நிலைநிறுத்த உதவுகிறது. சம உரிமை, சம வாய்ப்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவை நடைமுறையில் அமைய வேண்டும்.

இன்றும் பெண்கள் பல சவால்களை எதிர்கொள்கின்றனர் – பாலின வன்முறை, ஊதிய சமநிலை இல்லாமை, குறைந்த அரசியல் பிரதிநிதித்துவம் போன்றவை.

இச்சவால்களை கடக்க சட்ட ரீதியான பாதுகாப்பு, சமூக விழிப்புணர்வு மற்றும் கல்வி அவசியம்.

பெண்கள் முடிவெடுக்கும் இடங்களில் இருப்பது கொள்கை அமைப்புகளில் சமநிலையை உருவாக்குகிறது. இது அமைதி, ஒற்றுமை மற்றும் நிலைத்த வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

### தொழில்நுட்ப காலத்தில் பெண்களின் வளர்ச்சி

டிஜிட்டல் உலகம் இன்று எல்லைகளை உடைத்துள்ளது. பெண்கள் தகவல் தொழில்நுட்ப துறையில் அதிகளவில் இணைந்து வருகின்றனர். ஆன்லைன் தொழில்கள், தொலைதூர வேலை வாய்ப்புகள், டிஜிட்டல் கல்வி ஆகியவை பெண்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்குகின்றன.

இளம் பெண்களுக்கு STEM (Science, Technology, Engineering, Mathematics) கல்வியை ஊக்குவிப்பது நாளைய கண்டுபிடிப்புகளுக்கும் தொழில்நுட்ப முன்னேற்றத்துக்கும் வழிவகுக்கும்.

### இளம் தலைமுறை - நாளைய தேசத்தின் பெருமை

இன்றைய மாணவிகள் நாளைய தலைவர்கள். அவர்களுக்கு வழிகாட்டுதல், திறன் மேம்பாட்டு பயிற்சிகள், தலைமைத்துவ பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

குடும்பமும் கல்வி அமைப்புகளும் இணைந்து, "பெண்கள் எதையும் சாதிக்க முடியும்" என்ற நம்பிக்கையை வளர்க்க வேண்டும்.

அவர்களின் கனவுகளை கட்டுப்படுத்தாமல், ஊக்குவிக்க வேண்டும்.


### நிறைவுச் சிந்தனை

"பெண்களின் தலைமைத்துவம் – செழிப்பான தேசத்தின் பெருமை" என்பது வெறும் கோஷ மல்ல் அது ஒரு சமூகப் பொறுப்பு. பெண்கள் முன்னேறும்போது, சமூகம் சமநிலையுடன் வளர்கிறது.

பெண்களின் குரல் கேட்கப்படும் போது ஜனநாயகம் வலுப்பெறும்.

2026ஆம் ஆண்டின் மகளிர் தினம், பெண்களின் சாதனைகளை கொண்டாடு வதோடு மட்டுமல்லாமல், அவர்களின் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்கும் உறுதிமொழியாக அமையட்டும்.

பெண்களை மதிப்போம்.
பெண்களை முன்னேற்றுவோம்.
சமத்துவத்தை நிலைநிறுத்துவோம்.
செழிப்பான தேசத்தை உருவாக்குவோம்.



**பாத்திமா சுபியானி**
**சமாதான நீதிவான்**
**புத்தளம்**

# இலங்கையில் ஈரானிய கப்பல் பயணிகளுக்கு அடைக்கலம்

## ஜனாதிபதிக்கு றிஷாட் பதியுதீன் பாராட்டு

இலங்கைக் கடல் எல்லைக்கு அருகில் தாக்குதலுக்குள்ளான ஈரானிய கப்பலில் இருந்தவர்களைக் காப்பாற்றியதோடு, ஈரானின் மற்றொரு கப்பலை இலங்கைத் துறைமுகத்தில் தரிப்பதற்கும் அதில் பயணம் செய்த 208 பேருக்கு அடைக்கலம் கொடுப்பதற்கும் மனிதாபிமான அடிப்படையில் தீர்மானம் மேற்கொண்ட, ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவுக்கு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன் தனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி எடுத்த இந்தத் தீர்மானத்தின் மூலம் 'மனிதாபிமானமே எதிலும் முதன்மையானது' என்பதை - அவர் நிரூபித்துள்ளார் என்றும், இது - இலங்கையர்கள் அனைவரும் பெருமை கொள்ளும் தருணம் எனவும் றிஷாட் பதியுதீன் குறிப்பிட்டுள்ளார்.

"மத்திய கிழக்கில் நடந்து கொண்டிருக்கும் யுத்தம் - ஈரான் மீது திணிக்கப்பட்டது. அந்த நாட்டில் ஆயிரக்கணக்கான மக்கள், அமெரிக்க - இஸ்ரேல் கூட்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர். இந்தத் தருணத்தில் ஈரானின் இரண்டு கப்பல்களிலும் பயணித்த மொத்தம் 240 ஈரானிய பிரஜைகளை, ஜனாதிபதியின் துணிவான முடிவின் மூலம் காப்பற்றக் கிடைத்தமையினால், உலக வரலாற்றில் இலங்கை உயர்ந்து நிற்கிறது" என்றும் றிஷாட் பதியுதீன் கூறியுள்ளார்.



'இந்த விவகாரம் தொடர்பில் பொய்யான, பயமுறுத்தும் நோக்குடனான அதிகமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. நாட்டின் கௌரவத்தையும் மனித உயிர்களை பாதுகாக்கும் வகையிலும் நாடென்ற வகையில் சர்வதேச உடன்பாடுகளுக்கு எமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில்தான் நாம் இந்த தலையீட்டை செய்தோம். இது நாடென்ற வகையில் மிகவும் தைரியமான மனிதாபிமான முன்னெடுப்பாகும்' என்று, ஜனாதிபதி அனுர குமார திசாநாயக் தெரிவித்துள்ளமையை சுட்டிக்காட்டியுள்ள றிஷாட் பதியுதீன் "இதன் மூலம் மனிதாபிமானமுள்ள தலைமைத்துவத்தின் பண்பினை - ஜனாதிபதியிடத்தில் நான் காண்கிறேன்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கையின் மிக நீண்டகால நண்பராக ஈரான் இருந்து வருகிறது. இலங்கை பெரும் அனர்த்தங்களில் சிக்கித் தவித்த போதெல்லாம், ஓடிவந்து ஈரான் உதவியிருக்கிறது. அந்த வகையிலும், ஈரானுக்கு உதவ - இலங்கை கடமைப்பட்டுள்ளது" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# கற்பிட்டி நஷ்ர் பவுண்டேஷன் வழங்கும் "தெளிவு ரமழான்" நேரலை நிகழ்ச்சி




(சியாஜ்)

ரமழான் மாதத்தை சிறப்பிக்கும் முகமாக பல்லாண்டு காலமாக கற்பிட்டியில் பல்வேறு சமூக நலத்திட்டங்களை மேற்கொண்டு கற்பிட்டி நஷ்ர் பவுண்டேஷன் முதன் முறையாக முகநூல் வாயிலாக முன்னெடுத்துள்ள தெளிவு எனும் முதலாவது நேரலை நிகழ்ச்சி கற்பிட்டி ரஹ்மானிய்யா அரபுக் கல்லூரியில் இருந்து முகநூல் வழியாக கற்பிட்டி நஷ்ர் பவுண்டேஷனின் தலைவர் ஏ.சி.எம்.ஏ. முத்தலிப் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



இஸ்லாம் பற்றிய தெளிவூட்டல்களை கற்பிட்டி பிரதேசத்தில் உள்ள உலமாக்களைக் கொண்டு கேள்வி பதில் மூலம் பத்து நாட்களுக்கு பத்து வித்தியாசமான தலைப்புக்களில் இடம்பெறும் இந்நிகழ்வின் முதல் நிகழ்ச்சியில் ரமழானும் நாமும் எனும் தலைப்பில் தாருல் அர்கம் ஜும்ஆ பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம்.டி. றிப்கான் (றஹ்மானி) கலந்து சிறப்பித்தார்.

இந்த நிகழ்ச்சியினை கற்பிட்டி நஷ்ர் பவுண்டேஷனின் இணைப்பாளரும் சிரேஷ்ட அறிவிப்பாளருமான ஏ.ஆர்.எம் அஸ்கர் தொகுத்து வழங்குவதுடன் ரஹ்மானிய்யா அரபுக் கல்லூரி மாணவர் எம் யூ.எம் ஆசிமின் கஸிதாவும் இடம்பெற்றதோடு நிகழ்வில் கலந்து சிறப்பித்த உலமா மற்றும் ரஹ்மானிய்யா மாணவர்களுக்கும் கற்பிட்டி நஷ்ர் பவுண்டேஷன் நினைச் சின்னங்களை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# முஹம்மத் ஆலிமினின் "ஈரானிய உறவுகளுக்கு புனித ரமழான் மாதத்தில் மனித நேயப் பணி"



(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)

அமெரிக்கா கடற்படை நீர்மூழ்கி கப்பலினால் தாக்கப்பட்டு இலங்கையின் தென்னிலங்கை கடற்பகுதியில் கடலில் மூழ்கிய ஈரானிய கடற்படை கப்பலில் இருந்து இலங்கை கடற்படையால் மீட்கப்பட்ட காயமடைந்த முப்பத்திரண்டு ஈரானிய கடற்படை வீரர்கள் காலி கராப்பிடிய பெரிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த தகவல் கிடைத்தவுடன், கலீபதுல் குலபாவும், காலி மாவட்ட ஜம்மியத்துல் உலமாவின் தலைவருமான எம்.இஸட் முஹம்மத் ஆலிம் சிகிச்சை பெறும் ஈரானிய உறவுகளுக்கு மனித நேயம் பணி செய்து ஆறுதல் கூறியமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை மாநகர சபையில் இன ஐக்கியத்திற்கான இப்தார்




(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையில் ஒழுங்கு செய்யப்பட்ட இன ஐக்கியத்திற்கான இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு (05) மாநகர சபை மண்டபத்தில் ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை ஜம்மியதுல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் ஏ.எல்.எம். முர்ஷித் முப்தி சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொண்டு, மார்க்க சொற்பொழிவாற்றினார்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் கணக்காளர் ஏ.எஸ். மனாஸிர் அஹ்சன், ஆயுர்வேத வைத்திய அதிகாரி ஜ/மானா ஹஸீன், கல்முனை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம். அப்துல் மஜீத், கல்முனை மாநகர சபையின் உள்ளூராட்சி உத்தியோகத்தர் சர்ஜூன் தாரிக் அலி, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வர வர்மன் உட்பட கிளைத் தலைவர்கள், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், நூலகர்கள் உட்பட இஸ்லாமிய, இந்து, கிறிஸ்தவ உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும் பங்கேற்றிருந்தனர்.

# அலி காமெய்னியின் மறைவு - ஈரான் தூதரகத்திற்குச் சென்று அனுதாபத்தை பகிர்ந்த மக்கள் காங்கிரஸ் எம்பிக்கள்!



ஏகாதிபத்தியவாதிகளான அமெரிக்கா - இஸ்ரேல் ஆகியவற்றின் கூட்டு நடவடிக்கையின் மூலம் ஈரான் மீது மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட ஈரானின் ஆன்மீகத் தலைவர் அயத்துல்லா அலி காமெய்னியின் மறைவை முன்னிட்டு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தனது ஆழ்ந்த அனுதாபங்களை பதிவு செய்துள்ளனர்.

இதனையடுத்து, கொழும்பிலுள்ள ஈரான் தூதரகத்திற்கு விஜயம் மேற்கொண்ட அவர், அங்குள்ள தூதுவர். அலிடெர்ஷா டெல்கொஷ்வை சந்தித்து தனது அனுதாபத்தைத் பகிர்ந்து கொண்டதுடன், இரங்கல் பதிவேட்டிலும் தனது இரங்கல் செய்தியை பதிவு செய்தார்.

இந்த விஜயத்தின் போது, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் புத்தளம் மாவட்ட அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தாஹீர் மரிக்கார் மற்றும் கட்சியின் தேசிய அமைப்பாளரான அஷ்ரப் தாஹீர் ஆகியோரும் கலந்து கொண்டு தங்களது இரங்கலை பதிவு செய்தனர்.

## களுத்துறை முஸ்லிம் லீக்கின் மாதாந்த கூட்டமும் இப்தார் நிகழ்வும்



**(பீ.எம்.முக்தார்)**

களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக்கின் மாதாந்த கூட்டமும் இப்தார் நிகழ்வும் பேருவளை, சீனக்கோட்டை அல்ஹாஜ் அர்ஷத் சவாஹிரின் இல்லத்தில் தலைவர் தாஹிர் பாஸி தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்திற்கு களுத்துறை மாவட்டத்தின் சகல முஸ்லிம் பிரதேசங்களில் இருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

களுத்துறை மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில் ஆளுநருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் முன்னேற்றங்கள் குறித்த மேலதிக தகவல்கள் கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டன.

ஆசிரியர் வெற்றிடங்களை நிவர்த்திப்பதற்கு கல்வி அதிகாரிகளை மீண்டும் சந்திப்பதற்கு தீர்மானிக்க ப்பட்டது. மேலும், நல்லிணக்கம் மற்றும் சமாதானத்திற்கான குழு இந்த மாத இறுதியில் வெயங்கல்ல ஜும்மா பள்ளிவாசலில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள திறந்த பள்ளிவாசல் திட்டம் குறித்த விடயமும் இங்கு கலந்துரையாடப்பட்டன. குழுவின் உறுப்பினர்கள் குறித்த நிகழ்ச்சித் திட்டத்தின் பணிகள் மற்றும் அதன் செயற்பாடுகள் குறித்து தங்கள் கருத்துக்களை சபைக்கு தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தில் விசேட பேச்சாளராக கலாநிதி அஸ்வர் அசாஹிம் (அல் அஸ்ஹரி)கலந்து கொண்டார். முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர், அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் தற்போதைய தலைவர் ஷாம் நவாஸ்,முன்னால் தலைவர் சட்டத்தரணி என்.எம் சஹீட், உப தலிவர் பொஸர் பாருக் உள்ளிட்ட பல பிரதிநிதிகளும் இந்தக் கலந்து கொண்டனர்.

## அரசாங்க தகவல் திணைக்கள ஏற்பாட்டில் மாத்தளையில் கருத்தரங்கு



**(ஜெலீல்)**

அரசாங்க தகவல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாத்தளை மாவட்ட ஊடகவியளார்களுக்கான விளக்க கருத்தரங்கு அன்மையில் மாத்தளை பிரதேச செயலகத்தில் அதன் உதவி செயலாளர் திருமதி ரியால்தீனின் பங்களிப்புடன் நடைபெற்றது.

அரசாங்கத் தகவல் திணைக்கள பணிப்பாளர் கே.பண்டார தலைமையில் திணைக்கள துறைசார் அதிகாரிகளும் கலந்து கொண்டதுடன் ஏஐ செயலி மற்றும் ஊடகங்கள் அவைகள் வெளியிடும் தகவல்கள் சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர்கள் பணிகள் பற்றிய கானொலியின் மூலம் நீண்ட நேரமாக விளக்கமளிக்கப்பட்டதுடன் கலந்துகொண்ட ஊடகவியலாளர் களுடனான கருத்துக்களுக்கு அவர்களால் விளக்கங்களும் வழங்கப்பட்டன.



வடமத்திய மாகாணத்தில் முதன் முறையாக அனுராதபுரம் மடாட்டுகம பகுதியில் உலர்ந்த மற்றும் அரைத்த முருங்கை இலைகளை அரிசி மாமாவுடன் கலந்து உட்பத்தி செய்வதற்கான ஆலையை மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச திறந்து வைத்தார்.

**(படம் :- எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம் )**

# கற்பிட்டி பிரதேச செயலகத்திற்கு முன்னால் டித்வா கொடுப்பனவு கிடைக்காமை தொடர்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்



**(சியாஜ்)**

கற்பிட்டி பிரதேச செயலகத்தின் தளுவை. நிர்மல்புர கிராம சேவையாளர் பிரிவில் டித்வா புயல் அனார்த்ததினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண கொடுப்பனவு இன்னும் பலருக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைத்து செவ்வாய்க்கிழமை கவனயீர்ப்பு ஆர்பாட்டம் ஒன்று தளுவையின் விகாராதிபதி தலைமையில் கற்பிட்டி பிரதேச செயலகத்திற்கு முன் இடம்பெற்றது.

இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கிய தளுவை விகாராதிபதி கருத்துத் தெரிவிக்கையில்,

டித்வா புயல் அனர்த்தத்தினால் தளுவை மற்றும் நிர்மல்புர கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பாதிக்கப்பட்டவர்களில் சிலருக்கு மட்டுமே நிவாரண கொடுப்பனவு 25 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் பலருக்கு வழங்கப்படாமல் உள்ளதாகவும், மேலும் கற்பிட்டி பிரதேச செயலகத்தில் நிரந்தர பிரதேச செயலாளர் நியமிக்கப்படாமல் நீண்ட நாட்களாக அதற்கான வெற்றிடம் காணப்படுவதாகவும் அதன் காரணமாக பதில் கடமை புரியும் கற்பிட்டி பிரதேச உதவிச் செயலாளர் பீ.ஜீ.எஸ். என். பிரியதர்ஷினி மற்றும் புத்தளம் மாவட்ட அத்தியட்சகர் ஆகியோரிடம் இது பற்றிய முறைப்பாடு முன்வைக்கப்பட்டது எனவும் அதற்கான தீர்வுகள் இதுவரை கிடைக்கவில்லை. எனவே தான் இன்றைய தினம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த நிவாரண கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த வெயிலையும் பொருட்படுத்தாது தினசரி கூலித் தொழில் செய்யும் மக்களுக்காக இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முனெடுக்கப் படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது விடயமாக கற்பிட்டி ஊடகவியலாளர்கள், கற்பிட்டி பிரதேச பதில் கடமை புரியும் உதவிச் செயலாளர் பீ.ஜீ.எஸ்.என் பிரியதர்ஷினியிடம் வினவிய போது, நிவாரண கொடுப்பனவுகள் ஜனவரியில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதுடன் கொடுப்பனவு பெறத் தகுதியற்றவர்களும் விண்ணப்பத்திருந்த நிலையில் தளுவை, நிர்மல்புர கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தகுதியானவர்களை தெரிவு செய்யும் முகமாக கற்பிட்டி பிரதேச செயலகத்தின் அதிகாரிகளுடன் கிராம அனர்த்த குழுவினர் இணைந்து தகுதியானவர்கள் தெரிவுக் குழு நியமிக்கப்பட்டதாகவும் அக்குழுவினரின் இறுதி அறிக்கை செவ்வாய்க்கிழமை (03) காலையிலேயே கிடைக்கப் பெற்றுள்ளது எனவும் அந்த அறிக்கையின்படி தளுவை , நிர்மல்புர கிராமத்தில் இன்னும் 30 குடும்பங்களுக்கான 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வியாழக்கிழமை (05) வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# நபி மூஸா (அலை) அவர்களின் கைத்தடி கூறும் செய்திகள்

**1. சாதாரண கருவி மற்றும் அசாதாரண அர்த்தம்**

மூஸா (அலை) அவர்களின் கைத்தடி, வெளிப்புறமாகப் பார்க்கையில் ஒரு மேய்ப்பாளனின் சாதாரண குச்சியாகவும் அதில் எந்த விசேஷமும் மனிதக் கண்களுக்கு தோன்றாததாகவும் காணப்பட்டது, ஆனால் இறைவன் அதையே தனது சக்தியை வெளிப்படுத்தும் கருவியாக மாற்றினான்.
“மூஸாவே! அது என்ன உன் வலது கையில்?” (20:17)
இந்தக் கேள்வி, இறைவனுக்கு தெரியாமையால் எழுந்த ஒரு கேள்வி இல்லை மனிதன் “சாதாரணம்” என்று எண்ணும் ஒன்றுக்கு, இறை நோக்கம் இணைந்தால் அது எவ்வாறு அசாதாரண அர்த்தம் பெறுகிறது என்பதை உணர்த்துவதற்காகவே இந்தக் கேள்வி முன்வைக்கப்பட்டது.
உளவியல் பார்வையில், மனிதனின் வலிமை அவன் கையில் இருக்கும் பொருளில் இல்லை அதற்கு அவன் கொடுக்கும் அர்த்தத்தில் உள்ளது. உளவியலில் இதை ஆநயசைபெ யுவவசைடிரவழைெ என்று கூறுவர். மேலும், “என்னல் இதைச் செய்ய முடியும்” என்ற உள்ளார்ந்த நம்பிக்கையை Self-Efficacy என அழைக்கின்றனர்.
அதாவது, “நான் யார்?” என்ற எண்ணம் மாறும்போது, “என்னால் என்ன செய்ய முடியும்?” என்ற எல்லையும் தானாகவே விரிவடைகிறது. அதனால், நபி மூஸா (அலை) அவர்களின் கைத்தடி நமக்கு சொல்லும் முதல் பாடம் இறைவன் மனிதனின் சாதாரணத்தைத் தேர்ந்தெடுக் கிறான் அதை அசாதாரணமாக மாற்றுவது அவனுடைய ஆணை.

**2. கைத்தடி பாம்பாக மாறுதல்**

மூஸா (அலை) அவர்கள் பிர்அவ்னின் அரண்மனையில் தனது கைத்தடியை எறிந்த அந்த தருணம், ஒரு கண்கவர் அற்புதக் காட்சி மட்டுமல்ல அது, அதிகாரம் தனது வலிமையென நம்பியிருந்த உளவியல் அடித்தளத்தை முற்றாக சிதைத்த ஒரு வரலாற்றுத் திருப்புமுனையாகும்.
அரண்மனைச் சுவர்களுக்குள், படைகள், தங்கச் சிங்காசனங்கள், மந்திரவாதிகள் போன்றவை அதிகாரத்தின் அடையாளங்களாக நிறுத்தப்பட்டிருந்தபோது, அவற்றை எல்லாம் பொருட்படுத்தாத ஒரு எளிய கைத்தடி, “அதிகாரம் பயத்தில் தான் நிலைக்கிறது” என்ற பொய்யை வெளிப்படையாகக் கிழித்தெறிந்தது. அந்த கைத்தடி, பலத்தின் மொழியை அல்ல, உண்மையின் மொழியைப் பேசியது.
“அவர் தனது கைத்தடியை எறிந்தார் உடனே அது தெளிவான பாம்பாக மாறியது.” (7:107)
பிர்அவ்னின் ஆட்சி, ஆயுதத்தின் பலத்தால் மட்டும் நிலைத்திருக்கவில்லை. அது மக்களின் மனங்களில் விதைக்கப்பட்ட பயம் என்ற உளவியல் கட்டுப்பாட்டின் மீது நின்றது. அந்த பயமே அவனுடைய உண்மையான ஆயுதம். ஆனால் சத்தியம் வெளிப்பட்ட அந்த ஒரே நொடியில், அந்தப் பயத்தின் அடித்தளம் சிதறியது.
உளவியல் ரீதியாக, அடக்குமுறை ஆட்சிகள் Fear Conditioning மூலம் மக்களை கட்டுப்படுத்துகின்றன. மீண்டும் மீண்டும் பயத்தை ஊட்டுவதன் மூலம், “எதிர்த்தால் அழிவு” என்ற எண்ணத்தை மனதில் பதிய வைக்கின்றன. ஆனால் அந்த பயத்தை உருவாக்கிய நம்பிக்கையே பொய்யானது என்று வெளியாகிவிட்டால், அதிகாரத்தின் வலிமை தானாகவே சிதறிவிடுகிறது. இதையே Authorit Collapse என்று சொல்லலாம்.
பயத்தின் அடிப்படை பொய்யானதாக இருந்தால், சத்தியம் வெளிப்படும் தருணத்தில் அதனால் நிலைநிற்க முடியாது. நபி மூஸா (அலை) அவர்களின் கைத்தடி பாம்பாக மாறிய நிகழ்வு, இந்த உளவியல் உண்மையை குர்ஆன் வரலாற்றின் வழியாக மனிதகுலத்திற்கு தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

**3. மாயையும் அற்புதமும்**


மூஸா (அலை) அவர்கள் பிர்அவ்னின் அரண்மனையில் கைத்தடியை எறிந்த தருணம், போலி சக்திக்கும் உண்மையான சக்திக்கும் உள்ள அடிப்படை வேறுபாட்டை வெளிப்படுத்தியது.
“மூஸா (அலை) அதை எறிந்தது, அவர்கள் செய்த மாயையை விழுங்கிவிட்டது.” (26:45)
பிர்அவ்னின் மந்திரவாதிகள் நிகழ்த்தியவை மக்களின் கண்களை ஏமாற்றின. அவை உண்மையை மாற்றவில்லை உணர்வுகளை மட்டுமே மயக்கியது. ஆனால் நபி மூஸா (அலை) அவர்களின் கைத்தடி மனசாட்சியை விழிப்பூட்டியது.
உளவியல் பார்வையில், இங்கு இரண்டு தெளிவான நிலைகள் நுண்ணிய ஆனால் அடிப்படையான வேறுபாட்டுடன் பிரிந்து நிற்கின்றன:
மாயை (Perceptual Illusion) என்பது மனிதனின் உணர்வுகளையே இலக்காகக் கொள்கிறது. பார்வை, கேள்வி, பயம், அதிர்ச்சி போன்ற உணர்ச்சி அமைப்புகளை தற்காலிகமாக குழப்பி, உண்மை மாற்ற மடைந்தது போல தோற்றமளிக்கிறது. ஆனால் அந்த மாற்றம் வெளிப்புறத் தோற்றத்திலேயே முடிவடைகிறது் சிந்தனை ஆழத்தில் எந்த நிரந்தர மாற்றத்தையும் அது உருவாக்காது. அதனால், மாயையின் தாக்கம் காலப்போக்கில் கரைந்து மறையும் ஒரு உணர்ச்சி மயக்கமாகவே இருக்கும்.
இதற்குப் பிரதியாக, அற்புதம் (Miracle / Ayah) என்பது மனிதனின் உளவியல் மையத்தை நேரடியாகத் தொடும் நிகழ்வாக அமைகிறது. அது கண்களைக் கவர்வதற்காக மட்டும் அல்ல் மனசாட்சியையே ஆழமாகக் குலுக்கி விழிப்பூட்டுவதற்காக நிகழ்கிறது. இங்கு நிகழ்வது வெறும் உணர்வுக் குழப்பம் அல்ல் அது ஒரு Cognitive Awakening சிந்தனையின் விழிப்பு.
அந்த நொடியில், உண்மை மற்றும் பொய், சக்தி மற்றும் ஏமாற்றம், மனித ஆற்றல் மற்றும் இறை ஆதாரம் ஆகியவற்றுக் கிடையிலான எல்லைகள் திடீரெனத் தெளிவுபெறுகின்றன. மறைக்கப்பட்டிருந்த உண்மை வெளிப்படுகிறது் மாயை தனது முகமூடியை இழக்கிறது.
இந்த விழிப்பு, மனித மனதை பயத்தின் பிடியிலிருந்து விடுவித்து, நம்பிக்கையின் தளத்திற்கு நகர்த்தும் ஒரு ஆழமான உளவியல் திருப்புமுனையாக மாறுகிறது. ஆகையால், மாயை பார்க்கும் விதத்தை மட்டும் மாற்று கிறது அற்புதம் நினைக்கும் விதத்தையே மாற்றுகிறது. மாயை கண்களில் தோன்றி மறையும் அற்புதம் மனதில் பதிந்து, மனிதனை மாற்றுகிறது.

**4. மந்திரிவாதிகளின் ஈமான்**

மூஸா (அலை) அவர்களின் கைத்தடி நிகழ்த்திய அற்புதத்தின் மிகப் பெரிய விளைவு, அரங்கில் கூடியிருந்த மக்களின் வியப்பில் இல்லை பிர்அவ்னின் மந்திரவாதிகளின் உள்ளங்களில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தில் தான் இருந்தது.
“மூஸா மற்றும் ஹாரூன் அவர்களின் இறைவனை நாங்கள் ஈமான் கொண்டோம்.” (20:70)
இவர்கள் சாதாரண பார்வையாளர்கள் அல்ல. மாயையின் நுட்பங்களை முழுமையாக அறிந்த நிபுணர்கள். அதனால், இது மாயையா அல்லது உண்மையா என்பதை உணர்வாலும் அறிவாலும் உடனே உணர்ந்தார்கள். அந்த நொடியிலேயே, அவர்களின் மனநிலை முழுமையாக மாற்றமடைந்தது.
உளவியல் பார்வையில், இதை Cognitive Reframing அல்லது Sudden Insight Transformation என்று அழைக்கின்றனர். அதாவது, ஒரே கணத்தில் மனிதன் உலகத்தைப் பார்க்கும் கண்ணோட்டத்தை மாற்றிவிட்டால், பழைய நம்பிக்கைகள் சிதைந்து, புதிய உண்மை தெளிவாக மனதில் பதிவாகிறது.
இதுவரை அவர்கள் பிர்அவ்னை அதிகாரமாக பார்த்தார்கள்மாயையை சக்தியாக நம்பினார்கள்.ஆனால் உண்மை வெளிப்பட்ட தருணத்தில், அதிகாரம் மனிதனல்ல மற்றும் உண்மையான சக்தி இறைவனிடமே உள்ளது என்பதையும் உடனே உணர்ந்தார்கள். உண்மை தெளிவாகும் போது, மனம் தயங்குவதில்லை அது உடனே தனது திசையை மாற்றுகிறது. இதுவே குர்ஆன் இந்த நிகழ்வின் மூலம் சொல்லும் ஆழமான உளவியல் உண்மை.

**5. அச்சுறுத்தலின் முன் ஈமான்**

மாயக்காரர்கள் ஈமான் கொண்ட உடனே, பிர்அவ்ன் ”மரண அச்சுறுத்தல்” எனும் தனது வழக்கமான ஆயுதத்தைப் பயன்படுத்தினான் கைகள் கால்களை வெட்டுவேன், சிலுவையில் அறையுவேன் என்று மிரட்டினான்.
“எங்களின் மீது நீ உன் தீர்ப்பை நிறைவேற்று் இந்த உலக வாழ்க்கையில் மட்டும் தான் உன்னால் தீர்ப்பளிக்க முடியும்.” (20:72)
ஆனால், அந்த மிரட்டல்கள் அவர்களின் தீர்மானத்தை சிறிதும் குலைக்கவில்லை. ஈமான் கொண்ட இதயங்கள் பின்னடைய வில்லை. இந்த உண்மையை முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஹதீஸின் மூலம் ஆழமாக உணர்த்துகிறார்கள்:
“ஈமானின் இனிமையை அனுபவித்தவன், அதை எதற்காகவும் மாற்றமாட்டான்.”
இந்த வார்த்தைகள், மாயக்காரர்களின் நிலையைச் சரியாக பிரதிபலிக்கின்றன. அவர்கள் ஈமானை ஒரு கருத்தாக அல்ல் உள்ளார்ந்த அனுபவமாக சுவைத்து விட்டார்கள். அதனால், உடலை அச்சுறுத்தும் மரணம் கூட, உள்ளத்தை அசைக்க முடியவில்லை.
உளவியல் பார்வையில், மனித மனம் ஒரு உயர்ந்த மதிப்புடன் (Value) உறுதியாக இணைந்துவிட்டால், பயம் தனது தாக்கத்தை இழக்கிறது. இதையே Fear Extinction என்று கூறுவர். அதாவது, பயம் இருக்கலாம் ஆனால் அதனால் மனதை கட்டுப்படுத்த முடியாது. அந்த உயர்ந்த மதிப்பையே (Value Anchoring) மனம் உறுதியாகப் பிடித்துக் கொள்ளும் அடிப்படை அர்த்தம்.



மாயக்காரர்களின் நிலையில் ஏற்பட்ட மாற்றம், மனித உள்ளத்தின் மதிப்புக் கோவையை முழுமையாக மாற்றிய ஒரு உளவியல் புரட்சியாகும். முன்பு, அவர்களுக்குப் உயிர் என்பதே மிக உயர்ந்த மதிப்பாக இருந்தது் மரணம் என்ற அச்சுறுத்தல் அவர்களின் எல்லா முடிவுகளையும் கட்டுப்படுத்தும் சக்தியாக செயல்பட்டது. அதிகாரத்தின் பயம், தண்டனையின் அச்சம், உயிர் பிழைத்தல் என்ற எண்ணம் போன்றவை அவர்களின் சிந்தனையின் மையமாக இருந்தன.
ஆனால் பின்னர், உண்மை வெளிப்பட்ட அந்தக் கணத்தில், அந்த மதிப்புக் கோவை தலைகீழாக மாறியது. ஈமான் உயிரைவிட உயர்ந்த மதிப்பாக அவர்களின் உள்ளத்தில் நிலைபெற்றது. மரண அச்சுறுத்தல் இனி அவர்களை அசைக்கவில்லை ஏனெனில் உண்மைக்காக உயிரை இழப்பதே வெற்றியென அவர்கள் உணர்ந்தனர். இவ்வாறு, பயத்தால் கட்டுப்பட்ட மனிதர்கள், ஈமானால் விடுதலை பெற்ற சாட்சிகளாக மாற்றம் பெற்றனர்.
குர்ஆன் முன்வைக்கும் இந்த மாற்றம், மனித மனத்தின் ஆழ்ந்த உண்மையொன்றை வெளிச்சமிட்டு காட்டுகிறது: ஒரு மனிதனின் “மதிப்பு (ஏயடரந)” மாறும் போது, பயம் தானாகவே தனது அதிகாரத்தை இழக்கிறது. உயிர் தான் உச்ச மதிப்பாக இருக்கும் வரை, மரண அச்சம் மனிதனை அடிமைப்படுத்துகிறது ஆனால் ஈமான் அதைவிட உயர்ந்த மதிப்பாக மாறும் அந்தக் கணத்தில், அதே மரணம் துச்சமாக மாறும்..
இதனால்தான், மாயக்காரர்களின் கதை குர்ஆனில் ஒரு பழைய வரலாற்றுச் சம்பவமாக மட்டுமே நிற்கவில்லை. அது மனித மனத்தில் எந்நாளும் செயல்படும் நிரந்தர உளவியல் மற்றும் ஆன்மீக சட்டத்தை வெளிப்படுத்துகிறது. மதிப்பு மாறினால், பயத்தினால் உருவாகும் ஆட்சி முடிவடைகிறது் உண்மையின் முன் அச்சம் வீழ்கிறது. இதனாலே அல் குர்ஆன் இந்த நிகழ்வை மீண்டும் மீண்டும் மனிதனுக்கு நினைவூட்டும் காரணம்.

**6. கடலைப் பிளந்த கைத்தடி**

மூஸா (அலை) அவர்கள் இஸ்ராயீலர்களுடன் கடலின் முன் நின்ற தருணம், மனிதக் கணக்கில் முழுமையான முடிவின் தருணம். முன் விரிந்த கடல், பின்னால் ஃபிர்ஆனின் படை. தப்பிக்க எந்த வழியும் இல்லை என்று தோன்றிய அந்தக் கணம் தான், ஈமானின் உச்சம் வெளிப்பட்ட நேரம்.
“உன் கைத்தடியால் கடலுக்கு அடி என்று நாம் அவருக்கு வஹீ அனுப்பினோம்.” (26:63)
இங்கே கைத்தடி ஒரு தொழில்நுட்ப கருவி அல்ல் அது முழுமையான இறை நம்பிக்கை யின் வெளிப்பாடு. மூஸா அவர்கள் செய்ய வேண்டியது திட்டமிடல் அல்ல் கணக்கிடல் அல்ல் ஆணைக்கு கீழ்ப்படிதல் மட்டுமே. அந்த தருணத்தில் தான் தவக்குல் முழுமையடைந்தது.
உளவியல் பார்வையில், இந்த நிகழ்வு மனித மனத்தின் இரண்டு ஆழமான நிலைகள் ஒன்றாகச் சேர்ந்த தருணமாக விளங்குகிறது.
முதலாவது, சுயனளைஉயட வுசரளவ அதாவது, “நான் கண்களால் காண முடியாத பாதையையும் இறைவன் காண்கிறான் என் அறிவுக்கும் கணக்கிற்கும் அப்பாலும் ஒரு வழி இருக்கிறது” என்ற முழுமையான, நிபந்தனையற்ற நம்பிக்கை. இந்த நம்பிக்கை, மனிதனை பயத்திலிருந்து விடுவித்து, எதிர்காலத்தின் அநிச்சயத்தையும் அமைதியாக ஏற்கச் செய்கிறது.
இரண்டாவது நிலை, Letting Go of Control அதாவது, “எல்லாவற்றையும் நான் தான் கட்டுப்படுத்த வேண்டும்” என்ற மனநிலையை விட்டுவிடுதல். மனிதன் தனது எல்லைகளை உண்மையுடன் ஒப்புக்கொள்ளும் தருணத்தில், அவன் மனம் சுமையிலிருந்து விடுபடுகிறது. கட்டுப்பாட்டை விட்டுவிடுதல் பலவீனம் அல்ல மாறாக, இறை ஆணைக்குள் தன்னை ஒப்படைக்கும் ஒரு ஆழமான மன வலிமை. இந்த இரு நிலைகளின் சேர்க்கையில்தான், பயத்தால் மூடப்பட்டதாகத் தோன்றிய பாதைகள் திறந்து, புதிய வாய்ப்புகள் மனிதனுக்கு வெளிப்படுகின்றன.
மனித மனம் எல்லாவற்றையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முயன்றவரை, அது பயத்தில் சிக்கிக்கொள்கிறது. ஆனால் “இது என் எல்லைக்கு அப்பால்” என்று உண்மையுடன் ஏற்றுக்கொள்ளும் தருணத்தில், மனம் இலகுவாகிறது அங்கே தான் புதிய வாயில்கள் திறக்கப்படுகின்றன. மனிதன் “என்னால் அனைத்தையும் சுயாதீனமாக செய்ய முடியாது” என்பதை உணரும் தருணத்தில், “இறைவனால் முடியும்” என்ற புதிய பாதை திறக்கப்படுகிறது. கடலைப் பிளந்த கைத்தடி, இயற்கையை மட்டுமல்ல மனித மனத்தின் பயத்தையும் உடைத்த அற்புதமாக குர்ஆன் நமக்கு முன்வைக்கிறது.

**7. கைத்தடி ஆயுதமல்ல மாறாக தெய்வீக சக்தியின் வெளிப்பாடு**

நபி மூஸா (அலை) அவர்களின் கைத்தடி, குர்ஆனில் எங்கும் ஒரு கொலை ஆயுதமாக வர்ணிக்கப்படவில்லை. அது எப்போதும் இறை அடையாளமாக (ஆயா) தான் குறிப்பிடப்படுகிறது. இதன் மூலம், இறைவன் தனது சக்தியை அழிவுக்காக அல்ல விழிப்பூட்டலுக்காக வெளிப்படுத்துவான் என்பதை குர்ஆன் தெளிவாக உணர்த்துகிறது.
“நாங்கள் மூஸாவுக்கு தெளிவான ஒன்பது அடையாளங்களை வழங்கினோம்.” (17:101)
எனவே கைத்தடி உடல்களைத் தாக்கவில்லை அது மனங்களைத் தாக்கியது. அழிக்கவில்லை அது உணர்த்தியது.
உளவியல் ரீதியாக, Symbols (அடையாளங்கள்) மனித மனத்தில் வன்முறையைவிட ஆழமான மற்றும் நீடித்த மாற்றத்தை உருவாக்குகின்றன. வன்முறை மனிதனை அடக்கலாம் ஆனால் அவன் சிந்தனையை மாற்ற முடியாது. அடையாளங்கள் மட்டும் தான் மனிதன் உலகத்தைப் பார்க்கும் கண்ணோட்டத்தையே மாற்றுகின்றன.
நபி மூஸா (அலை) அவர்களின் கைத்தடி அதிகாரத்தை சவால் செய்தது, பயத்தின் மாயையை உடைத்தது மற்றும் உண்மை மற்றும் பொய் என்ற எல்லையை தெளிவாக்கியது. உண்மையான சக்தி, பயமுறுத்துவதில் இல்லை உணர்த்துவதில் உள்ளது என்பதை விளக்கியது.
இதனால் தான் அல் குர்ஆன் “கைத்தடி அழிவுகரமான ஆயுதமல்ல் மனிதகுலத்தை விழிப்பூட்டும் ஆன்மீக அடையாளமாக காணப்படுகிறது” என்ற ஆழமான செய்தியை முன்வைக்கிறது.

**8. இன்றைக்கும் பொருந்தும் பாடம்**

நபி மூஸா (அலை) அவர்களின் கைத்தடி, வெறும் ஒரு வரலாற்றுச் சம்பவமாக மட்டுப்படுவதில்லை அது அதிகாரம், பயம், உண்மை, நம்பிக்கை ஆகியவற்றின் உளவியல் இயங்கு முறைகளை ஆழமாக வெளிப்படுத்தும் ஒரு சின்னமாகும். மனித மனத்திற்கு காலத்தைக் கடந்து பேசும் நிரந்தர செய்தியை வழங்கும் இந்தப் பாடம், இன்றைய உலக அரசியல் சூழலுக்கும் அதே அளவு பொருத்தமானதாகத் திகழ்கிறது.
இன்றைய சூழலில், ஈரான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைப் பார்த்தால், மூஸா (அலை) அவர்களின் கைத்தடி சொல்லும் உண்மைகள் இன்னும் தெளிவாகப் புரிகின்றன.
மனித மனத்திற்கு குர்ஆன் முன்வைக்கும் மூன்று அடிப்படை நியதிகள்:

1- தனிமை மற்றும் பலவீனம்

உலக அரசியலில், அமெரிக்கா போன்ற சக்திவாய்ந்த நாடுகள் கூட்டணி, ஆயுதம், பொருளாதாரம் ஆகியவற்றை வலிமையாகக் கருதுகின்றன. ஆனால் ஈரான், பல நேரங்களில் தனிமையில் நிற்பதாகக் காட்டப்பட்டாலும், தனது அடையாளம் மற்றும் நம்பிக்கையில் உறுதியாக நிற்கிறது. இது மூஸா (அலை) அவர்கள் பிர்அவ்னின் அரண்மனையில் தனியாக நின்ற தருணத்தை நினைவூட்டுகிறது. எண்ணிக்கை அல்ல நிலைப்பாடு தான் மனவலிமை.

**2- உண்மை வெளிப்பட்டால், பொய் நிலைநிற்காது**

அதிகாரங்கள் உருவாக்கும் பயக் கதைகள், ஊடக மாயைகள், அரசியல் அச்சுறுத்தல்கள் போன்றவை ஒரு காலம் வரை மட்டுமே செயல்படும். உண்மை வெளிச்சத்திற்கு வந்தவுடன், அந்த மாயை சிதறும். பிர்அவ்னின் மாயை விழுங்கப்பட்டதைப் போல, இன்றைய உலகிலும் சத்தியம் நீண்ட காலத்தில் மறைக்க முடியாதது.

**3- உறுதியான ஈமான், அச்சத்தை மௌனமாக்கும்**

அமெரிக்காவின் வலிமை பெரும்பாலும் Fear Projection (அச்சுறுத்தல், தடைகள், தண்டனைகள்) என்ற உளவியல் ஆயுதங்களில் உள்ளது. ஆனால் ஈரானின் நிலைப்பாடு, “அச்சுறுத்தலை ஏற்றுக்கொள்ளாத மனநிலை மற்றும் தெய்வீக உதவி மீதான நம்பிக்கை ” யை அடிப்படையாகக் கொண்டது. இது மாயக்காரர்கள் மரண அச்சுறுத்தலின் முன் கூட ஈமானில் நிலைத்திருந்த நிகழ்வை நினைவூட்டுகிறது. அச்சம் ஆயுதமாக இருக்கும் இடத்தில், நம்பிக்கை கவசமாக மாறுகிறது.
இவ்வாறு, மூஸா (அலை) அவர்களின் கைத்தடி என்பது கடந்த கால நினைவுச் சின்னம் அல்ல. அது இன்றைய உலகில் கூட, வலிமை என்றால் என்ன, அதிகாரம் எதில் நிற்கிறது, பயம் எப்போது தோற்கிறது என்பதை மனித மனத்திற்கு தெளிவுபடுத்தும் ஆன்மீக-உளவியல் அடையாளமாகவே குர்ஆன் அதை முன்வைக்கிறது.
பர்அவ்னின் காலத்தில் வரலாறு கேள்வி எழுப்பியது- போலவே, இன்றும் அது ஒரு கேள்வியை எழுப்புகிறது: கைத்தடியின் சக்தியா நிரந்தரம், அரியணையின் சக்தியா?

முஹம்மது
அஸாம் மஜீதி





# பத்ர் யுத்தம் இஸ்லாத்தின் ஆணிவேர்

முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு 40 வயதாகும் போது அல்லாஹ் இஸ்லாம் வேதத்தை அருளினான். அன்று முதல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இஸ்லாம் வளர்ந்து வந்தது. இதனை கண்டு சகிக்க முடியாத, பொறாமை மிகுந்த மக்கத்து காபிர்கள் நபி (ஸல்) அவர்களுக்கும் அவரை பின்பற்றுவோருக்கும் சொல்லொணாத் துன்பங்களை இழைத்துக் கொண்டே இருந்தனர். இக்கொடுமைகளை தாங்க முடியாது நபி (ஸல்) அவர்களும் கூட்டத்தினரும் மக்காவை விட்டு மதீனா நகரிற்கு இடம்பெயர்ந்தனர். இது அரபியில் ஹிஜ்ரத் என்று அழைக்கப்படுவதுடன் இஸ்லாமிய ஆண்டின் ஆரம்பமாகவும் கணிக்கப்படுகிறது.

மதீனாவிலும் இஸ்லாம் வேகமாக பரவியது. இதனால் நபி (ஸல்) அவர்களையும் அவரது கூட்டத்தினரையும் ஒழித்துக்கட்ட அபூ ஜஹில் போர் தொடுக்கத் தயாரானான். 1000 இற்கும் அதிகமான மக்கத்து காபிர்களை ஒன்று திரட்டினான். அபூ ஜஹில் 1000 இற்கும் அதிகமான மக்கத்து காபிர்களுடன் 100 குதிரைகள் , கணக்கிலடங்கா ஒட்டகங்கள், 600 கவச ஆடைகளுடன் பத்ர் என்ற ஊரில் ஒன்று கூடினான். பத்ர் என்ற சிற்றூர் மக்காவிலிருந்து 343கிலோ மீற்றரும் மதீனாவிலிருந்து 153கிலோ மீற்றரும் ஆகும்.

அபூ ஜஹில் மக்கத்து காபிர்களுடன் படையெடுத்து வருவதை ஒற்றர் மூலம் அறிந்த நபி (ஸல்) அவர்களும் மதீனாவில் முஸ்லிம் படையை திரட்டினார். நபி (ஸல்) அவர்களின் படையில் முஹாஜிரீன்கள் 82 பேரும் அன்ஸாரீன்கள் 231 பேரும் ஆக மொத்தம் 313 பேர் பத்ர் யுத்தத்திற்கு தயாரானார்கள். நபி (ஸல்) படையில் 313 வீரர்களுடன் 02 குதிரைகளும், 70 ஒட்டகங்களுமே இருந்தன. முஸ்லிம்களின் சிறிய படையும் காபிர்களின் பெரும் படையும் களத்தில் மோத தயாராகின.

நபி (ஸல்) அவர்கள் தமது படையணியை பார்வையிட்ட போது முஆத் (ரலி), முஅவ்வித் (ரலி) ஆகிய அன்ஸாரீன் சிறுவர்களும் அணிவகுப்பில் இருப்பதை அவதானித்தார்கள். இருவரையும் யுத்தத்திற்கு செல்ல அனுமதி வழங்க விரும்பாமல் திரும்பிவிடும்படி பணித்தார்கள். நபி (ஸல்) அவதானிக்கும் போது இச்சிறுவர்கள் இருவரும் பெரியவர்கள் போன்று காட்டிக்கொள்வதற்காக குதிகால்களை உயர்த்தி, கால் விரல்களால் நின்று கொண்டிருந்தனர். நபி (ஸல்) அனுமதி மறுக்கவே தம்மால் போரிட முடியும் என்பதை காட்ட இருவரும் மல்யுத்தம் புரிந்து தம் வல்லமையை காட்டி போரில் ஈடுபட மன்றாடி கேட்டனர். இருவரதும் ஆர்வத்தை கண்டு அனுமதி வழங்கப்பட்டது. அப்றா பின்த் உபைத் (ரலி) என்ற பெண்மணி தனது ஏழு ஆண் பிள்ளைகளையும் யுத்தத்தில் கலந்து கொள்ள செய்ததும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.
முஸ்லிம் படையும் காபிர்களின் படையும் பத்ர் எனும் இடத்தில் முகாமிட்டுக் கொண்டன. பத்ர் யுத்தமானது ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு, ரமழான் மாதம், 17ஆம் நாள் நடைபெற்றது. அரபு நாட்டு யுத்த வழக்கின் படி தனியாளாக ஒருவருக்கொருவர் மோதிக்கொள்ளும் வாள் சண்டை யுத்தம் ஆரம்பிக்க முதல் நிகழும். இதற்கமைய அபூ ஜஹில் தனது படையில் இருந்து நன்கு தேர்ச்சி பெற்ற உத்பா, ஷைபா, வலீது ஆகிய மூன்று வீரர்களை இறக்கினான். இவர்களுடன் ஒருவருக்கொருவர் தனித்தனிய வாள் சண்டையில் ஈடுபட முஸ்லிம் அணியிலிருந்து மூன்று அன்ஸாரீன் வீரர்கள் களம் இறங்கினர்.

ஆணவம் பிடித்த காபிர் வீரர்களோ தம்மோடு மோதுவதற்கு மக்காவிலிருந்து இடம்பெயர்ந்து வந்த பலம் பொருந்திய எமது உறவினர்களான, துரோகிகளான மக்கத்து வீரர்களை களத்தில் இறக்க வேண்டுமென அடம் பிடித்தனர். உடனே நபி (ஸல்) அவர்கள் அலி (ரலி), ஹம்ஸா (ரலி), உபைதா (ரலி) ஆகிய மூவரையும் ஆரம்ப போர்க்களத்தில் இறங்கும்படி பணித்தார்கள். கணப்பொழுதிலே காபிர்கள் மூவரும் வெட்டி சாய்க்கப்பட்டனர். அலி (ரலி) அவர்கள் ஷைபாவையும், ஹம்ஸா(ரலி) உத்பாவையும், உபைதா (ரலி) வலீதுவையும் வாளால் வெட்டி சாய்த்தனர். மக்கத்து காபிர்களின் தலைவன் அபூ ஜஹில் சினம் கொண்டான். பின்னர் இரு படைகளும் மோதிக் கொண்டன.

எதிரும் புதிருமான அணிகளில் தந்தை மகனுடனும், அண்ணன் தம்பியுடனும், மாமன் மருமகனுடனும் சண்டையிடும் நிலையே பத்ர் போரில் நிலவியது. நபித் தோழர் அபூ உபைததுல் ஜர்ராஹ் (ரலி) அவர்கள் முஷ்ரிக்கான தனது தந்தையை கொலை செய்து சொர்க்கத்தை கொண்டு நன்மாராயம் கூறப்பட்டவராவார்.

வாலிபர்களான இருவர் அபூ ஜஹிலை தாக்கி எழுந்திருக்க முடியாதவாறு செய்தார்கள். பின்னர் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் நிலத்தில் விழுந்து கிடந்த அபூ ஜஹிலின் தாடியை பிடித்து, நீதானா அபூ ஜஹில்! நபி (ஸல்) அவர்களை இம்சை படுத்திய சண்டாளன் என்று சொல்லி தலையை வேறாக வெட்டி எடுத்தார்.

இதனையடுத்து காபிர்களின் படை சின்னா பின்னமாகின. காபிர்கள் சிதறுண்டு புறமுதுகு காட்டி ஓடினர். காபிர்களின் பெரும் படை தோல்வி கண்டது. காபிர்களின் அணியில் 70 பேர் கொல்லப்பட்டனர். முஸ்லிம் படையில் முஹாஜிரீன்கள் 06 பேரும் அன்ஸாரீன்கள் 08 பேரும் அடங்கலாக 14 பேர் வீரமரணம் அடைந்தனர்.
பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்ட காபிர்களின் படையில் குரைஷியர்களில் ஒரு பிரிவினரான பனூ ஹாஷிம் கோத்திரத்தினரை கொலை செய்ய வேண்டாம் என நபி (ஸல்) பணித்தார்கள். ஏனெனில் அவர்கள் யுத்தத்தை வெறுத்தவர்களாக அபூ ஜஹிலின் கட்டாயத்தின் பேரில் வந்தவர்கள் என்பதற்காக. பிடிக்கப்பட்டவர்களில் ஒரு பகுதியினர் தண்டப்பணம் செலுத்தி விடுதலையாக்கப்பட்டனர். வசதியில்லாதவர்கள் மதீனாவில் எழுதப்படிக்க தெரியாத சிறுவர்களுக்கு கல்வி போதிப்பதன் மூலம் விடுதலையாக்கப்பட்டனர்.

பத்ர் யுத்தத்தில் முஸ்லிம்கள் சிறிய கூட்டத்தினராக இருந்த போதிலும் பெரும் கூட்டத்தினரான காபிர்களுடன் மோதி வெற்றியடைந்தனர். பத்ர் யுத்தத்தில் அன்று முஸ்லிம்கள் வெற்றி பெறவில்லையென்றால், இஸ்லாமிய வரலாறே வேரோடு சாய்ந்திருக்கும். எனவே பத்ர் யுத்தமானது இஸ்லாத்தின் ஆணிவேராகும்.
முஸ்லிம்கள் சிறிய கூட்டத்தினராக இருந்த போதிலும் சத்தியத்தை நிலைநாட்டி ஈமானிய பலத்துடன் போராடியதால் வெற்றி பெற்றனர். நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் மன்றாடியதற்கிணங்க வானவர்களும் வந்து முஸ்லிம்களுடன் இணைந்து கொண்டதும் வெற்றிக்கு காரணமாகியது.

பத்ர் யுத்தம் இரு படைகளுக்கும் நல்ல படிப்பினையோடு முஸ்லிம்களுக்கு வெற்றியாக அமைந்தது. பத்ர் யுத்த வெற்றியானது இஸ்லாம் மென்மேலும் மேலோங்க உந்து சக்தியாக அமைந்தது.

**கலாபூஷணம் பரீட் இக்பால்**
**யாழ்ப்பாணம்**






# புத்தக வாசிப்பு பண்பாட்டின் எதிர்நிலை வழிவங்கள்

முறைப்படுத்தப்படாத எதுவும் எல்லை தாண்டிச் செல்கின்ற பொழுது ஆபத்தாக, அனர்த்தமாக, அமைந்து விடுகின்றது. சமகாலத்தில் வாசிப்புக்கும் அத்தகைய ஓர் எதிர்நிலை பக்கமும் பார்வையும் பரவலாக உண்டு. இது குறித்து இன்றைய பதிவில் கலந்துரையாட உள்ளோம்.
வாசிப்பு ஒரு பக்கம் மனித ஆளுமையை விருத்தி செய்கின்ற அதே நேரம் அது மிகச் சரியாக நெறிப்படுத்தப்பட்டு முறைப்படுத்தப்பட்ட வாசிப்பாக அமையாத போது அழிவுக்கும் அனர்த்தத்துக்கும் ஆபத்துக்கும் உள்ளாக வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டு விடும்.
முறையான வாசிப்பு வரவேற்கத்தக்க ஒன்றாக இருக்கின்ற அதேநேரம் முறையற்ற வாசிப்பு, ஒழுங்கீனமான வாசிப்பு, பயங்கர விளைவுகளை கொண்டு வந்து தரும். வாசிப்பு இன்றைய நவீன காலம் வேண்டி நிற்கின்ற மிக அத்தியாவசியங்களில் ஒன்று. மட்டும் அல்ல அது அத்தியாவசிய திறன்களில் ஒன்று என்றாலும் பிழையாகாது.
வாசிப்பின்மையால் சமயம் சார்ந்த விடயங்களில் கூட பகுத்தறிவை பிரயோகிக்க வேண்டிய இடங்களிலும் அதனை பிரயோகிக்காமல் இருப்பதால் பிழையான புரிதல்கள் சமயம் தொடர்பான விடயத்தில் ஏற்பட்டு விடுகின்றன. இதற்கு மறுத்தலையாக குறிப்பிட்ட பகுதியை முறையாக வாசிக்காமல் தன்னிஸ்ட்படி வாசிக்கையில் கூட சமய விடயங்களில் விவகாரங்களில் சர்ச்சைகள் ஏற்பட்டு விடுகின்றன.
எமது பாடசாலைகளில் மூன்று தவணைகளிலும் இடம் பெறுகின்ற பரீட்சைகளின் புள்ளிகளின் மேம்பாட்டுக்கு பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட புத்தக வாசிப்பு எந்தளவு தூரம் பயன் தருமோ அதேபோல பரீட்சைக்கு மாத்திரம் பாட நூல்களை நாம் வாசித்தால் அது எந்த வகையிலும் வாழ்க்கைக்கு பயனற்றதாக இருக்கும். நேர கால வீணடிப்பாக அமையும். அதே நேரம் வாசிக்காமலே இருப்பது அதனை விடவும் ஆபத்தானது. பசிக்காமலே இருப்பது முறையற்ற வாசிப்பை விட ஓரளவு சிறந்த நிலை என்று கூட சொல்லலாம்.
பாடசாலை மட்டத்திலான பரீட்சை அடைவுகளையும் சமூகத்தின் சிந்தனை மாற்றத்தின் வீச்சையும் துரிதப்படுத்துகின்ற ஒன்றாக இந்த வாசிப்பு அமைகின்றது.
அதை நேரம் வாசிப்பை ஒழுங்கமைக்கா விட்டால் கண்காணிக்காவிட்டால் மீளவும் சிந்தனை தேக்கத்துக்கும் பயங்கர விளைவுகள் உருவாவதற்கும் காரணமாக அமையும்.
மறுபக்கம் புத்தக வாசிப்பு அளவு கடந்து எல்லை மீறி செல்கின்ற பொழுது அது ஏனைய வேலைகளை சமூகத்தில் ஆற்ற வேண்டிய கருமங்களை சுய மேம்பாடுகளை கூட பாழ்படுத்தி விடும்.
அனவசியமான கருத்து பரிமாற்கள் விவாதங்கள் உசுப்பேத்தல்கள் சீண்டல்கள் விமர்சனங்கள் எப்பொழுதும் ஏனையோரை வம்புக்கு இழுத்தல் தன்னை பெரியவராகக் காட்டிக் கொண்டு தன்னைவிட வயதில் அறிவில் அனுபவத்தில் கூடியவர்களை மட்டம் தட்டி விடுவதற்காக தன்னுடைய எழுத்தாற்றலை வாசிப்பு அனுப்புவங்களை பயன்படுத்திக் கொள்ள பகிரங்கமாக பிறரை மான பங்கப்படுத்துவதற்கு அவ மரியாதைக்கு உட்படுத்துவதற்கெல்லாம் இந்த முறையற்ற வாசிப்பு களமமைக்கும். சமூகத்தை குழப்பி விடுவதற்காக தன்னுடைய கருத்தை திணிப்பதற்காக பலவந்தமாக வேனும் தன்னுடைய கருத்து மட்டுமே சரியானது என்ற வீண் வாதத்துக்கும் குதர்க்கத்துக்கும் அந்த வாசிப்பு களம் அமைக்கும். இத்தகைய புத்தக பண்பாட்டை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது அங்கீகரிக்க முடியாது அது மனித விழுமியங்களை தார்மீக கடப்பாடுகளை எல்லாம் தகர்த்து சிதைத்து அழித்துவிடக் கூடிய வாசிப்பாகவே அமையும் அறிவியல் அயோக்கியத்தனத்தின் அப்பட்டமான வெளிப்பாடாக குறைபாடாக அந்த வாசிப்பு அமைந்துவிடும். உண்மையில் இன்று சமூக ஊடக எழுத்துக்களில் பெரும்பாலானவை இத்தகைய தன்மை மிக்கதாகவே அமைகின்றது. இங்கு அறமோ அவதானமும் எதுவும் இல்லை.
எழுத்து மிகப்பெரிய ஆயுதமாக பயன்படுத்தப்படுகிறது.
இத்தகைய நிலை தோன்றி விடக்கூடாது என்பதற்காக இஸ்லாமிய வரலாற்றில் காணப்படக்கூடிய ஒரு சில உதாரணங்களை இந்த இடத்தில் ஞாபகப்படுத்தலாம்.
நபிகளாரிடம் கால் மடித்து கற்ற எத்தனையோ மூத்த சஹாபாக்கள் நபித்தோழர்கள் சின்னஞ்சிறிய புதிய நபித்தோழர்கள் நபிகளாருடைய ஒரு அறிவிப்பை ஹதீஸை முன்வைக்கின்ற பொழுது எந்தவிதமான குறுக்கீடுகளும் இல்லாமல் அவற்றை உள்வாங்கிக் கொள்வார்கள். செவிமடுப்பார்கள். ஆனால் அந்த சிறிய இளம் நபித்தோழர்கள் பிறப்பதற்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு வருடங்களுக்கு முன்பே நபிகளாரிடம் அந்த நபிமொழியை ஹதீஸை கற்றவர்களாக செவிமடுத்தவர்களாக அவர்கள் இருப்பார்கள்.



இது வாசிப்புப் பண்பாட்டிலும் எமக்கு மிகச்சிறந்த பாடமாக அமையும் மூத்தவர்கள் அமைதியாக இருந்து இளையவர்களை ஊக்குவிக்க கூடிய வகையில் அமைய வேண்டியது போலவே இளையவர்களும் எங்களை விட மூத்தவர்கள் இந்த விடயத்தை எமக்கு முன்னர் கற்று இருப்பார்கள் கற்றுக் கொண்டிருப்பார்கள். என்று நல்ல நோக்கத்தையும் வைத்துக் கொள்ள வேண்டும்.
அடுத்தவர்களோடு சண்டை பிடிக்கவும் பிரபல்யமடையவும் மல்லுக்கட்டவும் அறிவைத் தேடுவதும் வாசிப்பை பிரயோகிப்பதும் வாதத் திறமையை உபயோகிப்பதும் திறமைகளைப் பயன்படுத்தப்படுவதும் எழுத்தை ஆயுதமாக பயன்படுத்தி சமூகத்திலேயே குழப்பத்தை ஏற்படுத்துவதும் வாசிப்பு பண்பாட்டின் எதிர்நிலை வடிவமாகவே அமைகின்றது.
வாசிப்பு குறித்து எழுதியவர்கள் வாசிப்பின் வழியான பண்பாட்டை எழுதியவர்கள் நூல்களை எழுதியவர்கள் எந்த அளவு பண்பாட்டுடன் ஒழுக்கமாக இங்கிதமாக நடந்து கொண்டிருக்கின்றனர் அடுத்தவர்களின் கருத்துக்களை செவிமடுத்து அங்கீகரித்து மதித்து நடந்துள்ளனர் என்றவற்றையெல்லாம் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.
கருத்துக்களை சிந்தனைகளை கையாளும் கலை வழியாக இத்தகைய இங்கிதங்களை ஒழுங்குகளை நாம் கற்க மறந்தால் எமது வாசிப்பும் அறிவு பண்பாடும் எமக்கே எதிர் விளைவுகளை நிச்சயம் தோற்றுவிக்கும் சமூக ஊடக பாவனைகள் யாரையும் விட்டு வைக்காத இந்த சூழலில் எதற்கெடுத்தாலும் பிறரை தட்டுவது வெட்டுவது சீண்டுவது சிரிக்கும்படி வார்த்தைகள் வழியாக தூண்டுவது குத்துவது குதறுவது குழிப்பறிப்பது ஆளுமைகளை சிதைப்பது எள்ளி நகையாடுவது போன்றன இன்று கற்றவர்கள் மத்தியிலும் சர்வ சாதாரணமாக நிகழ்ந்து வருவதனை அவதானிக்கலாம்.
எமக்கு அறிவை பண்பாட்டை ஒழுக்கத்தை சிந்தனையை தரவேண்டிய வாசிப்புப்பண்பாடும் கலாசாரமும் பண்பட்ட ஒரு சமூகத்தை பக்குவமான ஒரு சமூகத்தை தான் உருவாக்க வேண்டும். சிந்தனையாளர்கள் அடுத்த சிந்தனையாளர்களை வெட்டி விமர்சிப்பதற்காக தங்களுடைய சிந்தனைகளை முன் வைக்கவில்லை. இந்த உலகத்திலேயே வளமான ஒரு பணி, சிந்தனை மேம்பாடு, புதிய தீர்வுகள், புதிய பார்வைகள் வரவேண்டும் என்பதற்காக தங்களுடைய ஆய்வுகளை அவதானங்களை அனுபவங்களை எல்லாம் திரட்டி சிந்தனைகளை எழுத்தாக கருத்துக்களாக ஆய்வுகளாக எமக்கு தந்திருக்கின்றனர். அவற்றிலிருந்து நாம் கற்றுக் கொண்ட பாடம் படிப்பினைகள் இனிவரும் சமுதாயங்களை உயர்த்தி விடுவதற்கு மேம்படுத்துவதற்கு அதனுடைய அபிவிருத்திக்காகத் தான் பயன்படுத்தப்பட வேண்டுமே தவிர அடுத்தவர்களை கீழ்த்தரமாக, கேவலமாக, இம்சிப்பதற்கு நிந்திப்பதற்கு வசை பாடுவதற்கு இத்தகைய அறிவும் பண்பாடும் அறிவு தேடலும் வாசிப்பும் ஆய்வு முயற்சிகளும் அனுபவங்களும் எமக்கு வழியமைத்து விடக்கூடாது.
இவை எல்லா வகையிலுமே அறிவின் எதிர்நிலைப் பட்ட வடிவங்களாகவே கருதப்படும்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.